Free Circulation Germany- England
மணி: 72 - ஓசை: 305 மாசி. February. 2022

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

28TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A




# இந்திய- சீன வல்லாதிக்க போட்டியை இலங்கை எவ்வாறு கையாள்கின்றது?

● கொழும்பிலிருந்து ஆர்.பாரதி





## பயத்தோடு பயணிக்கும் பொழுதுகள்

## குழந்தை கறுப்பா சிவப்பா ? குங்குமப்பூ... தீர்மானிக்குமா?

## இனிய காதலர் தின வாழ்த்துகள்

Happy Valentine's Day -Feb 14



யாழ்ப்பாணத்தில் 288 வது ஆண்டாக தொடரும் நெற்புதிர் அறுவடை விழா!




# உண்மையைச் சொல்லுங்கள் உங்களுக்கு மட்டும் தான் நேரம் இல்லையா!






**கல்லரிக்கும் சட்டியில் உருளைக்கிழங்கின் தோல் உரிக்கும் அம்மா!**



மாதவி

உலகளவில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து உணவுகளில் 3/1 க்கும் அதிகமானவை வீணாகின்றன. உணவுப் பொருட்களை வீணாக்குவதில் இங்கிலாந்திற்கு நிகர் வேறு இல்லை எனலாம். உணவு வீணாகுவதைக் குறைக்கப் பல ஏற்பாடுகள் இருந்தாலும், ஐரோப்பாவில் அதிக அளவு உணவுகள் இங்கிலாந்து நாட்டிலேதான் வீணாகிறது.

இங்கிலாந்தில் 8.4 மில்லியன் மக்கள் உணவுக் கஸ்ரத்தில் இருந்தாலும், ஒரே ஆண்டில் 9.5 மில்லியன் டன் உணவைக் கழிவாக இங்கிலாந்து தூக்கி எறிகிறது. [கணக்கெடுப்பு 4 ஜனவரி 2022]

**வீணாக வீசி எறிப்படும் மூன்று உணவுகள் பாண்! பால்!! உருளைக்கிழங்கு!!**

இதற்கு காரணம் ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம், இரண்டு வாங்கினால் கால்வாசி காசு மிச்சம். இதுபோன்ற சலுகைகளும்,மலிவு என தேவைக்கு அதிகமாக வாங்கி பின் வீசுவதும், மனிசருக்கு நிற்க, உண்ண, நேரம் இல்லாத உழைப்பும், இங்கு காரணமாகிறது.

சமைக்கும் போது பார்த்தால் மரக்கறி என்ன, மாமிசம் என்ன, ஒரு வாரத்தில் வீணாக வெட்டி எறியும் பகுதி நம் நாட்டில் இன்று ஒரு நாளைக்கு வயிறார உண்ணப் போதுமானது. இதே




அன்று நம் காலத்தில் 1960 களில் என்றால் இரு நாட்களுக்கு போதுமானது.

எல்லாம் இயந்திரமயம். அன்னாசிப் பழம் வெட்ட, சடார் என்று வட்டமாக நடுவில் வெட்டி எறிய. கரைப்பகுதியை ஆழமாக மூழ்கள் விலத்தி வெட்டி எறிய, நடுவில் ஒரு சிறு துண்டு அன்னாசி வரும். ஒருவர் சாப்பிடலாம். இதே அன்னாசியை அம்மா பக்குவமாக பொறுமையாக வெட்டி தரும்போது ஒரு குடும்பமே உண்ணலாமல்லவா. பல வீடுகளில் வீசும் பழமாக அப்பிள் பழமே உள்ளது. காரணம் பெரியவர் முதல் சிறியவர் வரை வெட்டிக் கொடுத்தால் மட்டுமே சாப்பிடுவார்கள். இதில் வாழைப்பழங்களும் அழுகிறது புரியாத புதிர்! உரித்துக் கொடுக்க ஆள் இல்லையா!

உருளைக்கிழங்கு அன்றும் இன்றும் நம்மண்ணில் விலை உயர்ந்த பொருளே! திருமண வீடுகளில் சமைப்பதற்கு சுவைக்காக மட்டுமன்றி, விணாகாமல் தோல் உரிக்க சுகம் என்றும், அவித்துப் பின் தோல் உரிப்பார்கள். இங்கு காதுக்குள் இயபோனை வைத்து


17 ஆம் பக்கம் பார்க்க...



வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 305


ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com


**"வெற்றிமணிமொழி'**

தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது


Vettimaniy Ltd
Company No: 8876276


# இந்திய– சீன வல்லாதிக்க போட்டியை இலங்கை எவ்வாறு கையாள்கின்றது?


கொழும்பிலிருந்து
ஆர்.பாரதி




இலங்கை மீதான தனது பிடியை இறுக்குவதற்காக இந்தியா புதிய உபாயங்களை வகுத்துச் செயற்படுகின்ற அதேவேளையில், சீனாவின் ஆதிக்கத்திலிருந்து விடுபடமுடியாத நிலையில் இலங்கை இருப்பதும் வெளிப்படையாகத் தெரிகின்றது. தற்போதைய நிலையில், தாம் எதிர்கொண்டிருக்கும் பாரிய பொருளாதார – நிதிப் பிரச்சினையை சமாளிப்பதற்கு சீனாவையும், இந்தியாவையும் பயன்படுத்தும் ஒரு உபாயத்தை இலங்கை பயன்படுத்துகின்றதா என்ற கேள்வி இப்போது எழுப்பப்படுகின்றது.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான பிராந்திய வல்லாதிக்கப் போட்டிக் களத்தில் இலங்கை எந்தளவுக்கு மாட்டிக்கொண்டிருக்கின்றது என்பதை சீன வெளிவிவகார அமைசதுர் வாங் யீயின் கடந்த வார இலங்கை விஜயத்தின் போது தெளிவாக உணர முடிந்தது. இந்தியாவின் அழுத்தங்களுக்காக இலங்கை மீதான தமது பிடியை எந்தளவுக்கும் விட்டுக்கொடுக்க தாம் தயாராகவில்லை என்பதை இதன்போது சீன வெளிவிவகார அமைச்சர் உணர்த்தியிருக்கின்றார். இதற்கு புதுடில்லி எவ்வாறு எதிர்வினையாற்றப் போகின்றது என்ற கேள்வியும் எழுப்பப்பட்டிருக்கின்றது.

இலங்கைக்கு கடந்த வாரம் அதிரடியான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ தனது விஜயத்தின் இறுதியில் தெரிவித்த கருத்துக்கள்தான் இராஜதந்திர வட்டாரங்களில் சர்ச்சையைத் உருவாக்கியிருக்கிறது. கொழும்பில் அவர் தங்கியிருந்தது ஒரேயொரு பகல் பொழுதுதான். ஜனவரி 8 இரவு கொழும்பு வந்த அவர், மறுநாள் பகல் பல்வேறு சந்திப்புக்கள், நிகழ்வுகளில் கலந்து கொண்ட பின்னர் தாயகம் திரும்பிவிட்டார். கொழும்பில் அவர் தங்கியிருந்தது 24 மணி நேரத்துக்கும் குறைவாகத்தான். ஆனால், அவரது விஜயம் முக்கியமாக அவதானிக்கப்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன.

'இலங்கை – சீன உறவுகளில் மூன்றாவது தரப்பு தலையிடத் தேவையில்லை' என்பதுதான் இலங்கைப் பயணத்தின் இறுதியில் அவர் சொன்ன கருத்து. மூன்றாவது தரப்பு யார் என்பதை அவர் பெயர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்காத போதிலும், அவர் இந்தியாவுக்குத்தான் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கின்றார் என்பதில் சந்தேகமில்லை. இலங்கையில், அதிகரித்துவரும் சீனாவின் ஆதிக்கம் தொடர்பில் இந்தியா அச்சமடைந்திருப்பது இரகசியமான ஒன்றல்ல. அதனைக் கட்டுப்படுத்துவதற்கான சில திட்டங்களை புதுடில்லி முன்னெடுத்துவருவதும் தெரிந்ததுதான். இந்தப் பின்னணியில்தான் சீன வெளிவிவகார அமைச்சர் இந்தியாவுக்கு எச்சரிக்கை விடும் பாணியில் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.





இலங்கையில் சீனா முன்னெடுத்துவரும் திட்டங்களை இந்தியா நுணுக்கமாக அவதானித்துவருவது தெரிந்ததுதான். குறிப்பாக வடக்கில் சீன நிறுவனங்கள் முன்னெடுக்கும் திட்டங்கள் குறித்து தமது அதிருப்தியை புதுடில்லி பல சந்தர்ப்பங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் வெளிப்படுத்திவந்திருக்கின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று தீவுகளில் காற்றாலை மின்சக்தி நிலையங்களை அமைப்பதற்கு சீனாவுக்கு அனுமதி வழங்கப்படுவதாக வெளிவந்த செய்திகளையிட்டு, இந்தியா தமது அதிருப்தியை வெளிப்படையாகவே பதிவு செய்திருந்தது.

இதனையடுத்து இந்தத் திட்டத்தை சீனா கைவிடுகின்றது என வெளிவந்த செய்திகளை யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த இலங்கைக்கான சீனத் தூதுவர் மறுத்திருந்தார். இந்தத் திட்டங்களைக் கைவிடும் திட்டம் எதுவும் இல்லை எனவும், திட்டமிட்டபடி அதனைச் செயற்படுத்தப்போவதாகவும் அவர் தெரிவித்திருந்தார். இதற்கு மேலாக மன்னாரிலிருந்து இராமர் பாலத்தின் இந்திய எல்லை வரை விரைவு படகு ஒன்றில் சென்று அவர் பார்வையிட்டிருந்தார். இவை அனைத்தும் இந்தியாவை

04 ஆம் பக்கம் பார்க்க...




03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இந்திய- சீன வல்லாதிக்க போட்டியை

சீண்டும் செயற்பாடுகளாகவே அமைந்திருந்தன.

இந்தநிலையில்தான் இலங்கை வந்த சீன வெளிவிவகார அமைச்சர், ‘இலங்கை – சீன உறவுகளில் மூன்றாவது தரப்பு தலையிடத் தேவையில்லை’ என்ற கருத்தை முன்வைத்திருந்தார். தனது 24 மணி நேர விஜயத்தின் போது இரண்டு முக்கிய சந்திப்புக்களை சீன அமைச்சர் மேற்கொண்டிருந்தார். முதலில் பிரதமர் மகிந்த ராஜபக்சவை அவர் சந்தித்தார். இரண்டாவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை அவர் சந்தித்தார். மாலையில் சீனாவினால் உருவாக்கப்பட்ட கொழும்பு துறைமுகர் நகரத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் அவர் கலந்துகொண்டிருந்தார்.

ஜனாதிபதியுடனான அவரது சந்திப்பும் முக்கியமான ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. காரணம் இந்தச் சந்திப்பின்போது இரண்டு முக்கியமான கோரிக்கைகளை ஜனாதிபதி முன்வைத்திருந்தார். ஜனாதிபதியின் இந்தக் கோரிக்கை, சீனாவின் பிடி இலங்கையில் மேலும் இறுகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்திருப்பதைத்தான் உணர்த்தியது.

முதலாதாக – கொவிட் தொற்று நோய்க்கு முகங்கொடுத்துள்ள சூழ்நிலையில், பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக கடனை மீளச் செலுத்துவதை மறுசீரமைப்பதில் கவனம் செலுத்தினால், அது நாட்டுக்கு பெரும் நிவாரணமாக அமையும் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

அதேபோன்று, சீனாரவிலிருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளின் போது சலுகை வர்த்தகக் கடன் திட்டத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தால், கைத்தொழிற்றுறையைத் தடையின்றி சீராக நடத்த முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்த சீன வெளிவிவகார அமைச்சர் எதிர்காலத்தில் அவை நிறைவேற்றப்படும் எனப் பதிலளித்தார்.

இந்த இரு விடயங்களும் இலங்கை மீதான சீனாவின் பிடி மேலும் இறுகுவதற்கான வாய்ப்புக்களைத்தான் சுட்டிக்காட்டுகின்றது. இந்தியாவுடனான தமது பேரம்பேசும் சக்தியை அதிகரித்துக்கொள்வதற்கான தந்திரோபாயமாக கொழும்பு இதனைப்பயன்படுத்துகிறதா என்ற கேள்வியும் உள்ளது.

ஆக, இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினை சீனாவின் பிடியிலிருந்து அது மீளமுடியாத ஒரு நிலையில் இருக்கின்றது என்பதைத்தான் சீன வெளிவிவகார அமைச்சருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான பேச்சுக்கள் உணர்த்தியிருந்தன.




கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட கடன்களை மீளச் செலுத்துவதற்கும், வட்டியைக் கட்டுவதற்கும் இலங்கைக்கு நிதி அவசரம் தேவையாக இருக்கின்றது. இந்தியா, சீனா ஆகிய நாடுகள் தற்போது கொடுக்கவுள்ள நிதி உதவி இதற்காகத்தான் பயன்படுத்தப்படப்போகின்றது. அதாவது, சீனாவுக்கு வட்டியைக் கொடுப்பதற்காகவே சீனாவிடம் கடனைக் கேட்கும் நிலையில் இலங்கை உள்ளது என்பதுதான் பரிதாபகரமானது.

சீன வெளிவிவகார அமைச்சரிடம் ஜனாதிபதி முன்வைத்த இரண்டு கோரிக்கைகளும் சீனாவின் பிடியிருந்து இலங்னையினால் மீளமுடியாதிருப்பதை தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றது. அதேவேளையில், ‘இலங்கை – சீன உறவுகளில் மூன்றாவது தரப்பு தலையிடத் தேவையில்லை’ என சீன வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருப்பது, இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் தொடரப் போகின்றது என்பதற்கான ஒரு முன்னறிவிப்பாகவே கருதப்பட வேண்டும்.

இலங்கையில் அதிகரித்துவரும் சீன ஆதிக்கம் தொடர்பில் அண்மைக்காலமாக இந்தியா நேரடியாகவும் மறைமுகமாகவும் தனது அதிருப்தியை வெளிப்படுத்திவருகின்றது. தம்முடைய பாதுகாப்புக்கு இது அச்சுறுத்தல் என்ற வகையில் இந்தியத் தரப்பினரால் முன்வைக்கப்படும் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதற்கு சீனா தயாராகவில்லை.

இலங்கையில் தம்மால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்கள் அனைத்தும், வர்த்தக நோக்கததைக் கொண்டமைந்தவை என்பதே சீனாவின் உத்தியோகபூர்வ கருத்தாக இருக்கின்றநது. ஊதாரணமாக – யாழ்ப்பாணம் தீவுப் பகுதிகளில் திட்டமிடப்பட்ட காற்றாலை மின்சாரத் திட்டத்தில் சீன அரசாங்கத்துக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை எனவும், சீனாவிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றே அதனை ரெண்டர் – கேள்விப் பத்திரம் மூலமாகப் பெற்றிருந்தது எனவும் இலங்கைக்கான சீனத் தூதுவர் அண்மையில் யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருந்தார்.







அவர் என்னதான் சொன்னாலும், இலங்கையில் ரெண்டர் மூலமாக திட்டங்களைப் பெற்றுக்கொண்ட சீன நிறுவனங்கள் அனைத்துமே அந்த நாட்டு அரசின் ஆதரவுடன் செயற்படுபவை. அல்லது சீன அரசினால் உருவாக்கப்பட்டவை. ஆக, அதற்கும் தமக்கும் சம்பந்தமில்லை என சீன அரச தரப்பில் சொல்லப்படுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்தின் ஒரு அங்கமாகவே இவை செயற்படுகின்றன என்பதும் கவனிக்கத்தக்கது.

இந்தப் பின்னணியில் கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த இடத்திலுள்ள இலங்கையைப் பயன்படுத்திக்கொள்வதென்பது சீனாவுக்கு தவிர்க்க முடியாத ஒன்று. ஏதோ ஒரு வகையில் இலங்கையை அது தனது வலைக்குள் வீழ்த்திவிட்டது என்பது தெரிகின்றது. அந்தப்பிடியை தொடர்ந்தும் பேணுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது சீன வெளிவிவகார அமைச்சரிடம் முன்வைத்த கோரிக்கை போதுமானது.

அதேவேளையில், சீனாவின் திட்டங்களுக்குள்ள அச்சுறுத்தல் இந்தியாதான். ஆதற்குப் பதிலடியாகத் தான் ‘இலங்கை – சீன உறவுகளில் மூன்றாவது தரப்பு தலையிடத் தேவையில்லை’ என்ற கருத்து சீன வெளிவிவகார அமைச்சரினால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஒற்றை வசனத்துக்குள் நிறைய அர்த்தங்கள் உள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை சீன – இந்திய ஆதிக்கப்போட்டியைப் பயன்படுத்திக் கொண்டு தன்னுடைய நலன்களை – குறிப்பாக பொருளாதார நலன்களைப் பெறுவவதற்கான உபாயங்களை வகுக்கின்றது. இது உடனடியாக பலனைத் தரலாம் அனால். நீண்டகால அடிப்படையில் ஆபத்தானதாகவே முடியம்!



# அட கூடிவாழ்ந்தால் கோடி நன்மை அது பொய்யானதோ?



## பிரிட்டிஷ் சட்டத்துறை வரலாற்றில் முதற்தடவையாக ஒரு விவாகரத்து தீர்வு மொத்தம் 500 மில்லியன் பவுண்ட்ஸ்!

டுபாய் மன்னர் மீது பிரிட்டிஷ் நீதிமன்றம் கடும் நடவடிக்கை! ‘நீப்’ செய்தி அல்ல. நான் இலண்டன் வழக்கறிஞராக இருந்துகொண்டு பிரிட்டிஷ் நீதிமன்றத்தில் சென்ற மாதம் விவாகரத்து வழக்கு ஒன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பை திரிவுபடுத்தி எழுதவே மாட்டேன்.அது ஒரு உண்மைச் செய்தி–ஒரு விவாகரத்து வழக்கு.

இலண்டனில் முடிவடையும் விவாகரத்து வழக்குகளில், பிரிந்து செல்லும்மனைவிக்கு இவ்வளவு ஆயிரம் பணம்/சொத்து வழங்கப்படவேண்டும் என்றும்,தனியாக வாழும் மனைவி குறையின்றி வாழவும், குழந்தைகளுக்கு வசதியான கல்வியையும் வாழ்க்கைத் தரத்தையும் வழங்கவும் வேண்டும் என்றும் தீர்மானிக்கும் இலண்டன் மேல்நீதிமன்றம் பெருந்தொகை சொத்தையும் பணத்தையும் மனைவிக்கு வழங்கும்படி உத்தரவிடுவது இங்கு வழக்கம்! உலகில் மற்ற நாடுகளில் ஒரு கணவனுக்கு எதிராக நீதிபதி ஒருவர் தீர்ப்பு வழங்கினால், அந்தக் கணவன் ‘‘தூ! இந்தப் பெட்டைச்சிக்கு நான் ஒரு பணமும் கொடுக்கமாட்டேன்’’ என்று பே பே காட்டிவிட்டு ஓடிவிட முடியாது.

லண்டன் நீதிமன்றம் பல விசித்திரமான வழக்குகளை சந்தித்திருக்கிறது. இந்த வழக்கைத் தொடர்ந்த மனைவி, ஒரு ராஜாதிராஜனின் புதல்வி. ஜோர்டான் முன்னாள் மன்னர் ஹுசைனின் புதல்வி இளவரசி ஹயா. தற்போதைய ஜோர்டான்மன்னர் அப்துல்லாவின் சகோதரி. அப்படியானால் இலண்டன் நீதிமன்றத்தில் கடுமையான தீர்ப்பு விதிக்கப்பட்ட கணவர் யார்?

பிரிட்டிஷ் சட்டத்துறை வரலாற்றில் முதற்தடவையாக வழங்கப்பட்ட



பெருந்தொகை விவாகரத்துதீர்வு மொத்தம் 500 மில்லியன் பவுண்ட்ஸ். தீர்வில் பாதிக்கு மேற்பட்ட தொகை 251.5 மில்லியன் பவுண்ட்ஸ் ரொக்கப் பணமா மனைவிக்கு வழங்கப்படவேண்டும் என்று பிரிட்டிஷ் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. பிரிட்டிஷ் நீதிமன்றம் உத்தரவிட்டது எந்தக் கணவர்மீது? கணவர் என்றால் அவர் ஒரு சாமானிய கணவரல்ல! அவர் ஒரு அரபு நாட்டின் மன்னாதிமன்னன் கோடானு கோடீஸ்வரர். டுபாய் நாட்டின் ஆட்சித் தலைவர் –72 வயதான ஷேக் முகம்மது பின் ரஷீட் அல் மக்தூம்.

விவாகரத்தானவர் அவரது ஆறாவது மனைவி –இளவரசி ஹயா. பிரிட்டனில் சறே, எகம் என்ற இடத்தில் உள்ள மாபெரும் மாளிகையில் வாழ்ந்து வருகிறார். இது இலண்டனில் இளவரசி டயானா வாழ்ந்து வந்த கென்சிங்டன் அரண்மனைக்கு அருகில் உள்ள இன்னொரு மாளிகை. இந்த இரண்டு இல்லங்களையும் பராமரிக்க இளவரசி ஹயாவுக்கு இந்தத் தொகையை வழங்கும்படி இலண்டன் நீதிமன்றம் உத்தரவிட்டிருக் கின்றது. இவற்றோடு இளவரசி ஹயாவினதும், அவருக்குத் தேவையான தாதி மற்றும் உதவியாளர் போன்றோரின் சம்பளம், இருப்பிடச் செலவுகள் மற்றும் இளவரசியின் பாதுகாப்புக்கான கவசவண்டிகள், இளவரசி வீட்டில் வளர்க்கப்பட்டுவரும் பல்வேறு குதிரைக்குட்டிகள் உட்பட செல்லப் பிராணிகள் ஆகிய வற்றுக்குத் தேவையான பராமரிப்புச் செலவுகளும் கணிசமான அளவு வழங்கப்படவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.



விமல் சொக்கநாதன்
(இங்கிலாந்து)

இளவரசிக்கு பிறந்த 14வயது புதல்வி, 9 வயது புதல்வர் இருவரது செலவுகளுக்காகவும் ஆண்டொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் 56 லட்சம் பவுண்ட்ஸ் வழங்கப்படவேண்டும் என்றும், இந்தப் பணம் செலுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்த 290 மில்லியன் பவுண்ட்ஸக்கு எழுத்து மூலமான உத்தரவாதம் வழங்கப்படவேண்டும் என்றும்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. இலண்டன் மேல்நீதிமன்றத்தில் பல மாதங்களாக நடத்தப்பட்டுவந்த இந்த விவாகரத்து வழக்கு மத்திய கிழக்கு வட்டாரத்து அரச குடும்பங்களின், இதுவரை காலமும் காதும் காதும் வைத்தாற்போன்று மூடப்பட்டிருந்த அரச வாழ்க்கை முறையை பிரகாசமான வெளிச்சம்போட்டு முழு உலகத்திற்கும் பரகசியப்படுத்தியிருக்கிறது! ஆறாவது மனைவியான இளவரசி ஹயாவுக்கு பிறக்காத வேறு இரண்டு யுவதிகள் ஷேக்கா லத்தீபா,ஷேக்கா சம்சா இருவரும் இலண்டனில் வாழ்ந்துவரும்போது அவர்களின் விருப்பத்திற்கு எதிராக அவர்களை டுபாய்க்கு கடத்திச் சென்றார் டுபாய் மன்னர் ஷேக் முகம்மது. புதல்வியர் இருவர் டுபாய்க்கு கடத்தப்பட்டமை போல தாமும் ஒருநாள் கடத்தப்படலாம் என்று இளவரசி ஹயா நிரந்தர அச்சத்தில் வாழ்ந்து வருவதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.இதனால் தமதும் தமது இளம் குழந்தைகளின் பாதுகாப்புக்காகவும் பெருந்தொகையான பணத்தை இளவரசி ஹயா செலவிட்டு வந்தார்.

டுபாய் ஆட்சியாளர் ஷேக் முகம்மது தமது இலண்டன் மனைவி இளவரசி ஹயாவின் எல்லா நடவடிக்கைகளையும்



28 ஆம் பக்கம் பார்க்க...





Luckyfly
Lucky Fly Reisebüro
மீண்டும் எங்கள் சேவைகள் ஆரம்பம்!
இது வரை வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்ட
சிரமத்திற்கு வருந்துகின்றோம்.
Be Safe Be happy
SriLankan
New Summer
2022 Holidays
Book early & save BIG
Frankfurt –Colombo Ab: 680 €
HAPPY Valentine Day
உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
Let's Start again
e.mail: info@L-Fly.de | www.L-fly.de
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
QATAR AIRWAYS
Emirates
Gulf Air
Essener Str.26 44793 Bochum-Germany




இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், புனிதப்பயணம்
அநேக மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இத்தாலி Antonius Padua,Venedig
போலந்து Krakow , Schwarzemadonna, Jaznagro போர்த்துக்கல்
Lissabon,Fatima ஆகிய இடங்களுக்கு May,June,July,Aug மாதங்களில் பஸ் மூலம்
பிரயாணம் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.
பிரயாணம் செய்ய விரும்புவோர் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: Josep ஜோசப் (49) 0151 520 23115 | Muruga முருகா: (49) 0175 850 1489



# விடிஞ்சா பொழுதுபட்டா சீரியல்

"விடிஞ்சா இரவு தூங்கிற வரைக்கும் சீரியல் பார்த்து கிட்டே இருக்கவேண்டியது'' இது இன்றுவரைக்கும் பல பெண்களை நோக்கி வைக்கப்படும் குற்றசாட்டு. உண்மையிலேயே இந்தப் பெண்கள் ஏன் டிவி சீரியல்களில்; இப்படி மூழ்கித் திளைத்துப்போய் உள்ளார்கள்? இந்தக் கேள்வி நீண்ட நெடு நாட்களாகவே பலரது மத்தியிலும் இருந்துவருகிறது. ஊடகங்கள் மனிதத் தொடர்புகளை வலுப்படுத்தும் சங்கிலிகள். தொலைகாட்சி வழியிலான தொடர்புகள் சாமான்யரையும் சென்றடையும் வலிமையான ஒன்று. தொலைக்காட்சிகள் இன்று அதிகப்படியாய் குறிவைத்துப் பிடிப்பதென்னவோ இளகிய மனம் படைத்த பெண்களைத் தான் போலும்! அவை ஒவ்வொன்றும் வணிக ரீதியில் ஒன்றையொன்று மிஞ்சும் வகையில் வெவ்வேறு நேரங்களில் விதம் விதமான சீரியல்களை ஒளிபரப்பி பெரும்பாலான பெண்களது சிந்தனைச் சிறகுகளை கட்டிப்போடுவதுடன், அவர்களது உழைப்பினையும் நாசமறுத்து வருகிறது என்றால் அது மிகையில்லை அல்லவா ? அட, எடுத்த எடுப்பில் இப்படி பெண்கள்மீது குற்றம்சாட்டிவிட முடியுமா? சீரியல் பார்ப்பதொன்றும் பாரதூரமான குற்றம் அல்லவே ... நாள்முழுதும் வெளிவேலைகளில் மூழ்கிவிட்டு, வீட்டுக்கு வரும் ஆண்களோ/ பெண்களோ சீரியல் பார்க்கும் பெண்களை கொஞ்சம் மட்டமான கண்ணோட்டத்தில் பார்ப்பதுதான் யதார்த்தம்.

ஆனால், இவர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று யாராவது ஆழ்ந்து யோசித்துப் பார்த்திருக்கிறோமா ?

இதுதொடர்பாக அண்மையில் நான் இணையத்தில் வாசித்த ஓர் விடயத்தினை இங்கே பகிர்ந்துகொள்ள நினைக்கிறேன், கல்வி என்பது கல்யாணச் சந்தையில் முன்னணியில் நிற்கவேண்டும் என்ற நிர்பந்தத்துக்கு என்றாகிவிட்ட நிலையில், படித்த பெண் வேண்டும் என்று தேடிக் கட்டிக்கொள்பவர்கள்கூட, திருமணதிற்குப்பின் குடும்பப் பொறுப்பு என்ற ஒன்றை முன்னிறுத்தி சிலர் பெண்களை அவள் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் பணியில் இருந்து நிறுத்தி விடுகிறார்கள். இலட்சக் கணக்கில் சம்பாதிக்கும் ஆண்களைக்காட்டிலும் திறமையான பல பெண்கள் தொலைக்காட்சிக்குள் புதைந்துபோய் கிடக்கிறார்கள். சரி, இவர்கள் ஏன் இப்படி விழுந்தடித்துக்கொண்டு சீரியல் பார்க்கிறார்கள்? இங்கேதான் மறைந்துகிடைக்கிறது ஓர் உண்மை.





பிரியா இராமநாதன்
(இலங்கை)

பெரும்பாலான பெண்கள் தங்களுடைய வாழ்வில் ஓர் பிடிப்பினை ஏற்படுத்திக் கொள்வதற்க்காகவே சீரியல் பார்க்கத் தொடங்கிவிடுகின்றார்களாம்! இது, அன்றைய நாளை எதிர்நோக்கிக் காத்திருக்க ஒரு காரணத்தை அவர்களுக்கு உண்டாக்கிக் கொடுக்கிறதாம்!? என்ன நம்ப மறுக்கிறதா மனம்? நம்பித்தான் ஆகவேண்டும்,9.30கு சீரியல் ஆரம்பித்துவிடும் என்று, திட்டம்போட்டு வீட்டு வேலைகளை அவசர அவசரமாய் முடிப்பது, சமையலை தயார் செய்வது என்று இது ஒருவகையான மனநிறைவினை அவர்களுக்குக் கொடுக்ககூடியதாய் இருக்கிறதாம். மதியம் செய்தியறிக்கையின்போது சமையலறைக்குள் பாய்ந்து சென்று சாப்பிடுவது அலுவலகத்தில் “lunch break“ இல் சாப்பிடும் ஒரு உணர்வையும் அவர்களுள் ஏற்படுத்துகிறதாம்! நான் ஒன்றும் வெட்டியாக இல்லை எனக்கும் முக்கியமான வேலை இருக்கிறது என்ற மனோபாவம் இவர்களை இப்படிச் செய்யத் தூண்டுகிறது என்று அந்த இணையக் கட்டுரை நீண்டிருந்தது .

நானும் யோசித்துப்பார்க்கிறேன், இதில் உண்மை இல்லாமலும் இல்லை. வீட்டு வேலைகளை மட்டுமே தலையாயக் கடமையாகக் கொண்ட பெண்கள் தங்களுடைய மிகப்பெரிய ஆறுதலாக இந்த தொலைக்காட்சித் தொடர்களை நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். தங்களுடைய அன்றாடப் பிரச்சினைகளை மறக்க ஒரு வடிகாலாக பல பெண்களுக்கு இந்த சீரியல்கள் துணை புரிகின்றனபோலும். சீரியலில் தோற்றுப்போகும் கதாப்பாதிரங்களை தன்னுடைய மாமியாராகவோ,நாத்தனாராகவோ,பக்கத்துவீட்டுப் பெண்ணாகவோ நினைத்துக் கொண்டு, ஜெயிக்கும் கதாபாத்திரங்களை தன்னுடைய பிரதிபலிப்பு என்று இவர்கள் நினைத்துக் கொள்கிறார்களாம். பெரும்பாலும் அரசியல், பொருளாதாரம், அல்லது வேறு ஏதேனும் தலைப்புகள் பற்றியெல்லாம் பேசப் பிடிக்காத பெண்கள், தங்களுக்குள் சந்தித்துப் பேசும்போது இந்த ‘சீரியல்’ என்பது பொதுத் தலைப்பாகிவிடுகிறதாம். ஏன், அலுவலகப் பெண்கள்கூட தங்களுக்குக் கிடைக்கும் இடைவேளையில் சீரியல் பற்றிப் பேச தவறுவதில்லையே. இங்கே ஓர் விடயம்தனை கட்டாயம் குறிபிட்டாகவேண்டும், சிறு வயதிலிருந்தே நாமெல்லாம் யாரோ ஒருவர் கதை சொல்ல அதைக் கேட்டு வளர்ந்தவர்கள், அல்லது தொடர்கதைகளை படித்து வளர்ந்தவர்கள். அடுத்து என்ன? என்ற ஆர்வம் / தெரிந்துகொள்ளும் ■

28 ஆம் பக்கம் பார்க்க...






# ஹர்த்தால்

"நாளை யாழ்.குடா நாடு முழுவதும் ஹர்த்தால்'' எண்டு முரசொலியில முன்பக்கம் வாசிச்சவுடன் எனக்குள் ஒரு குறுகுறுப்பு. ஏன் இந்த ஹர்த்தால், ஹர்த்தால் எண்டால் என்ன, யார் இதை ஒழுங்கு படுத்தி இருக்கிறார்கள், யாரை எல்லாம் ஹர்த்தால் செய்யச் சொல்லுறார்கள் எண்ட சிந்தனை ஒண்டும் இல்லை, ஆனாலும் எனக்குள் இருந்த வேற ஆர்வம் அம்மாவுக்கு தொற்ற முதல் நான் வெளிக்கிட்டன். இண்டைக்காவது கொஞ்சம் இருந்து மெல்லச் சாப்பிடன் எண்டு வீட்டை சொன்னதை எல்லாம் கவனிக்காம, அவசரமா வெளிக்கிட்டன் ஹர்த்தாலை எப்பிடி முழுமையா அமுல் படுத்துவது எண்டு.

நல்ல ஞாபகம், நிசாகரன் லண்டனுக்கு படிக்கப் போய் அனுப்பின முதலாவது கடிதத்தில் ''மச்சான் இங்கேம் உங்க மாதிரித்தான் திடீரெண்டு holiday எண்டு அறிவிச்சா, விசிலடிச்சு கூக்காட்டுறாங்கள்'' எண்டு எழுதி இருந்தான்.

படிக்கேக்க மகிழ்ச்சி தாறது ரெண்டே ரெண்டு விசயம், ஒண்டு திடீரெண்டு பாடம் free வாத்தி வரேல்லை எண்டதும், மற்றது நாளைக்கு ஹர்த்தால் பள்ளிக்கூடம் இல்லை எண்டிறதும் தான்.

''நான் போட்டு வாறன் எண்டு சொல்லீட்டு'' அம்மா ஓமெண்ட முதல் வெளிக்கிட்டிட வேணும் இல்லாட்டி வாசிக்காமலே sign பண்ணிற bank agreement மாதிரி அம்மான்டை condition list பெரிசா இருக்கும். மத்தியானம் வந்து உடுப்புத் தோய்க்கிறது, பின்னால வாழைக்கு பாத்தி வெட்டிறது, தூசு தட்டிறது ஓம்பதாம் வாய்ப்பாடு, ரெண்டு தேவாரம், English spelling பாடமாக்கிறது எண்டு மனிசி போறதுகள் mood ஐயே குளப்பீடும். அவைக்கு ஒரே கருத்துத்தான் ''விளையாட்டு படிப்பைக் கெடுக்கும், படிப்பெண்டாக் கஸ்டப்பட்டு படிக்கோணும்''.



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

ஹர்த்தால் அண்டு சைக்கிளில எங்கேம் தூரப்போயிடுவன் எண்டு, சைக்கிளைப் பூட்டி துறப்பை ஒளிச்சு வைச்சிட்டினம். மதிலால நடந்து போய் பக்கத்து ஒழுங்கை நவாஸ் குறூப் பாட சேர cricket தொடங்கிச்சுது. சிவசொரூபன் open bowling , அரவிந்தன் open batting எண்டு team ஐப் போட்டு வழமை போல எங்களை கடைசிக்குத் தள்ளிவிட்டாங்கள். எப்பவும் கடைசி வரை batting தர மாட்டாங்கள் அதுகும் ஆக்கள் கூட எண்டால் team இலயே இல்லை. Lastman ஐ chance கேட்டு ஒருக்கா என்னை அவுட்டாக்கேலாம கஸ்டப்பட்டாப்பிறகு தான் ஒரு மாதிரி team இல சேத்தாங்கள், reserve player ஆய். எங்கடை சாபம் பலிக்க ரெண்டாவது ஓவரிலயே அடிச்ச பந்து பக்கத்து வெறும் வளவுக்கை விழுந்து துலைஞ்சு போக, பத்தைக்குள்ள பந்தில்லாத ஆத்திரத்தை பக்கத்து தென்னை மரத்தில காட்டினம்.

இவ்வளவு நேரமும் கடைசியாய் இருந்த நான் இப்ப open batsman ஆ வந்தன் வேற ஆக்கள் இல்லாத படியால். நான் மரம் ஏறி இளனீர், தேங்காய் எல்லாம் புடுங்கிப் போட, cricket plan மாறிச்சுது. தேங்காயை உரிச்சு பக்கத்து வீட்டையே வித்து, அதில முன் ஒழுங்கையில ஜெயந்தன் வீட்டை கோழி வாங்கி, செல்லடிப் பயத்தில வேலணைக்கு வீட்டை விட்டுப் போன lecturer வீட்டை ஆக்கிரமிச்சம்.

ஒரு வீட்டை மிளகாய்த்தூள், ஒரு வீட்டை வெங்காயம் எண்டு உரிமையோட களவெடுத்து ஒரு சமத்துவக் கறிவைக்க, என்னத்தோட கறியைச் சாப்பிடிற எண்டு கேள்வி வந்திச்சிது. சந்திக்கடையில ரொட்டி வாங்குவம் எண்டு முடிவெடுக்க, நான் போறன் எண்டு வெளிக்கிட்ட கணேஸ்குமார் அண்ணையையும், சிவசொரூபனையும் ரொட்டியோட வருவினம் எண்டு வெந்த கோழியும், வெறும் வைத்தோட நாங்களும் பாத்துக் கொண்டிருந்தம்.

ஓடிப்போனா ஐஞ்சு நிமிசத்தூரம் ஆனால் அரை மணித்தியாலமாக் காணேல்லை, சுடச்சுட ரொட்டி போட்டுக் கொண்டு வாறாங்களோ எண்டு யோசிக்க ஒழுங்கையால நடந்து போன ரெண்டு பேரும் மதில் பாஞ்சு ஓடி வந்து, பங்கர் வெட்டப் பிடிக்கப் பாத்தாங்கள் நல்ல வேளை அருந்தப்பு எண்டு விவரிக்க, ரொட்டி போச்சே எண்டு நவாஸ் கவலைப்படத் தொடங்கினான். கொண்ட கொள்கையில மாறக்குடாது எப்பிடியும் ரொட்டி தான் சாப்பாடு எண்டு ஆரோ சொல்ல, தினேசின்னடை அப்பா பாங் மனேஜர் அரை நேரத்தோட பாங்கை பூட்டிட்டு வந்தார்.

26 ஆம் பக்கம் பார்க்க...





# கிழக்கு மாகாணத்தில் 1600 க்கும் மேற்பட்ட இடங்கள் தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளம்

தமிழர்களை துன்புறுத்தும் வகையில் வன இலாகாவும் தொல்பொருள் திணைக்களமும் செயற்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

ஆயிரம் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் தமிழர்களும் தமிழ் பௌத்தர்களாக இருந்துள்ளார்கள் என்பதை வரலாறு கூறுகின்றது. ஆனால் இன்று பௌத்தமதம் என்றால் பெரும்பான்மையினத்துக்கு மட்டும் சொந்தமானது என்று பார்க்கும் நிலையென்பது மிகவும் கவலைக்குரியது எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் அப்பகுதிகளில் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து பொதுமக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

மட்டக்களப்பு,போரதீவுபற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேற்றுச்சேனைக்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் அங்கு முன்னெடுக்கப்படும் மண் அகழ்வு நடவடிக்கைகள் குறித்து நேரடியாக சென்று பார்வையிட்டதுடன் அது தொடர்பில் கிராம மக்களுடனும் கலந்துரையாடினார்.

அதனை தொடர்ந்து போரதீவுபற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரிவுக்குட்பட்ட விவேகானந்தபுரம் அம்மன் குளம் கிராமத்தில் காணப்படும் மிகவும் பிரசித்தி பெற்ற புல்லுமலையிலல் அமையப்பெற்ற ஶ்ரீ சக்தி வேலாயுதர் ஆலய வளாகத்தில் திடிரென்று சென்ற தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்கள அதிகாரிகள் கிராம வாசிகளுக்கு தெரியப்படுத்தாமல் 'இவ்விடம் தொல்லியல் இடம்' பதாதையை நட்டு சென்றுள்ளனர். இந்த மலையில் ஆதியாக முருக வழிபாடு இருந்ததாகவும் இந்த முருகன் ஆலயத்தில் நேர்த்தியாக பல பக்த அடியார்கள் வந்து பூசை செய்வதாகவும் கடந்த சில மாதங்களுக்கு முன்பதாக சில பௌத்த மத பிக்குகள் வந்து பார்வையிட்டு சென்றதாகவும் அதன் பின்னர் தற்போது இவ்வாறு தொல்லியல் இடமாக பதாதைகள் நடப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.



இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து அப்பகுதிக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் அப்பகுதியை பார்வையிட்டதுடன் அது தொடர்பில் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடினார்.

இதேபோன்று விவேகானந்தபுரம் பகுதியில் 35குடும்பங்கள் கல்குவாரிகளில் கல் உடைத்துவாழ்வாதாரத்தினை முன்னெடுத்துவந்த நிலையில் தற்போது அவை நிறுத்தப்பட்டு அந்த கல்குவாரிகள் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் போரதீவுப்பற்று பிரதேச அமைப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனால் கடந்த காலங்களில் கல்குவாரி நடாத்திவந்த 35குடும்பங்களும் வாழ்வாதாரத்தினை இழந்துள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்,தொல்பொருள் திணைக்களம் என்று கூறிவிட்டு அதற்குள் மக்கள் வரக்கூடாது என்று சொல்வதன் நோக்கம் அப்பகுதிக்குள் விகாரைகளை அமைப்பதற்காக கூட இருக்கலாம்.

இன்று கிழக்கு மாகாணத்தில் 1600க்கும் மேற்பட்ட இடங்கள் தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இவையனைத்தையும் அரசாங்கம் கையகப்படுத்தும் நிலையேற்பட்டால் தமிழர்களின் அனைத்து வழிபாட்டு இடங்களும் பறிபோகும் நிலையேற்படும். அதேபோன்று இப்பகுதியில் வன இலாகா என்ற போர்வையில் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றது. ஆனால் மட்டக்களப்பு–அம்பாறை எல்லைப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சொந்தமான வனலாகா காணியை அதற்குரிய அமைச்சர் 500பேருக்கு மூன்று ஏக்கர் வீதம் பிரித்து வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.இதனை நான் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் இது தவறான விடயம் அவர்களை அப்புறப்படுத்தவேண்டும் என்று கூறியபோது மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் இராஜாங்க அமைச்சரும் மௌனமாக இருந்தனர். ஆனால் இன்று விவேகானந்தபுரத்திற்குள்ளேயே வந்து பரம்பரை பரம்பரையாக தோட்டம் செய்துவரும் காணிகளை வனஇலாகா அபகரிப்பு செய்யும்போது இவர்கள் மௌனம் காப்பது என்பது கவலையான விடயமாகும். இந்த நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கும்போது இந்த நாட்டில் தமிழர்களை ஒடுக்குவதற்கும் துன்புறுத்துவதற்குமாக வனஇலாகாவும் தொல்பொருள் திணைக்களமும் செயற்படுவது மிக கவலையான விடயம்.இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இன்று கிழக்கை மீட்கப்போகின்றோம் என்று வந்தவர்கள் எல்லாம் அதனை மீட்கமுடியாமல் மக்களின் வயற்றில் அடிக்கும் வேலையையே செய்கின்றனர்.அவ்வாறு கிழக்க மீட்கப்போகின்றோம் என்று வந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் போரதீவுப்பற்று பிரதேச அமைப்பாளருக்கு 35குடும்பங்களின் வாழ்வாதார தொழிலை முன்னெடுத்த கல்குவாரியை நிறுத்திவிட்டு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.இதேபோன்றுதான் வேற்றுச்சேனையில் மணல் அகழ்வு நடவடிக்கையிலும் குறித்த அமைப்பாளரே ஈடுபடுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.






# மௌனத்தின் கூப்பாடு

**கோகிலா மகேந்திரன்**
(இலங்கை)

"அண்ணை ஒரு சிகரெட் தாங்கோ" கேட்டவன் இளைஞன். பக்கத்திலுள்ள சாப்பாட்டுக்கடையில் வேலை செய் பவன்தான். கேட்டதும் விலை குறைந்த ஒரு பொருள். என்றாலும் குரலில் ஒரு அதிகாரம் இருந்தது. அவனுக்குக் கேட்டது உடனே கிடைத்துவிட்டது. அவன் காசு கொடுத்ததையும் தெருவில் நின்ற இவர் காணவில்லை. தனக்கு "மிக அவசரம்" என்ற தொனியை அழுத்தமாகப் போட்டிருந்தான். சமையல் அடுப்பிலாக இருக்கும்!

மழை தூறுகிறது. இவர் குடையை விரித்துப் பிடித்துக்கொண்டு நிற்கிறார்.

இன்னொரு மத்திய வயதுப் பெண். நீண்ட நேரமாகவே "கவுண்டர்" இல் முதலாளிக்கு மிக அருகில் நின்று ஏதோ கதைக்கிறாள். ஒரு மீட்டர் இடைவெளி பற்றிக் கேள்விப் பட்டிருப்பாளோ தெரியவில்லை. ஒரு வாடிக்கையாளர் போய் மற்றவர் தொடங்குவதற்கிடையில் ஒரு வசனமாவது கதைத்து விடுகிறாள்.

படித்த குற்றம் இவர் நின்று கொண்டிருக்கிறார்.

அடுத்தவர் புதிய காரில் வந்து இறங்கினார். இந்தக் கடை முதலாளி அளவு "தொந்தி" இல்லாவிட்டாலும்




"நானும் முதலாளி"என்பதைக் கார்க் கதவு திறந்த முறையிலும் சாவியைச் சுழற்றிக் கொண்டு நடந்த வகையிலும் உறுதிப்படுத்தினார். எந்தக் கேள்வியும் இல்லாமல் –இது "பூட்சிட்டி" இல்லை என்பதை நினைவில் கொள்க –கையில் சில பொருள்களைத் தூக்கினார். முதலாளி பவ்வியமாய் எழுந்து வந்து அவற்றை வாங்கி "பாக்" இல் போட்டு காரில் வைத்தார். ஐயாயிரம் ரூபாத் தாள்!. மீதி வழங்கப்பட்டது. கார் ஸ்டார்ட் !.

இவர் "பென்ஷன்" எடுத்த மறு நாளில் ஒரு நாள் ஐயாயிரம் நீட்டி "சில்லறை இல்லாமல் ஏன் கடைக்கு வாறனீங்கள்" என்று வாங்கிக் கட்டியது நினைவுச் சுவட்டில் ஓடி மறைந்தது. மழை வலுக்கிறது. தெருவில் வந்த பஸ்ஸுக்கு வழி விட்டு கடைப்பக்கமாக ஒதுங்கி நிற்கிறார். இப்போது மத்தியவயதுப் பெண்ணின் குரல் கேட்கிறது.

"அப்ப பச்சை மிளகாய் ஆயிரத்து நூறு குறையாதோ ?"

"இல்லை"

"ஐம்பது கிராம் போடுங்கோ"

"ஐஞ்சு கிராம் போடுவம்" முதலாளியின் குரலில் எரிச்சல் !.அவள் அசடு வழிந்தாலும் சிரிக்கிறாள்.

அடுத்தவர் "மோ பைக்" நிறுத்திய "ஸ்டைலில்" அவரது உயர் பதவி தெறித்துக் கிளம்பியது.

"அங்கிள் ஒரு மூடை மா எடுத்து வையுங்கோ வாறன்"

"இப்பவே கொண்டு போங்கோவன். ஒரு மூடை ஒருத்தருக்கும் குடுக்கிறேல்லை" முதலாளியின் குரல் சுவிங்கமாய் இழுபட்டது. "அப்ப தாங்கோ" அவர் வேகமாய் நுழைந்து வெளியேறினார்.

இவர் கடையின் ஒற்றையடிப் பாதைக்குள் உள்நுழையும் முடிவு பற்றிக் கடுமையாய் யோசித்தார்.

"முக க் கவசம்,சமூக இடைவெளி,காற்றோட்டமுள்ள இடம்" எண்ணங்கள் தடுத்தன.

இவர் நின்றுகொண்டிருக்கிறார்.

மத்திய வயது தொடர்கிறது . "கத்தரிக்காய் என்ன போடுறியள்?"

"ஐந் நூறு தானப்பா" "குறைக்கமாட்டியளோ?"

காலைமுதல் மதியம் வரை தெருவில் காத்திருந்த கிழவர் உள்ளே இறங்கினார். முதலாளி தொலைபேசியில் !

"நான் பத்துக் கேட்டனான். ஐஞ்சாவது அனுப்படாப்பா!" வாயிலுள்ள பாக்கை மென்றவாறு மொத்த வியாபாரியுடன் சிரித்துக் கதைக்கிறார்.

இவர் படித்த அமைதியான சுபாவம் கொண்ட ஓய்வுபெற்ற கௌரவமான மனிதர். இன்னும் நிற்பார்!

# யாழ்ப்பாணத்தில் 288 ஆவது ஆண்டாக தொடரும் நெற்புதிர் அறுவடை விழா!







நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நெற்புதிர் அறுவடை விழா 17.01.2022 காலை இடம்பெற்றது. தைப்பூசத்தினத்துக்கு முதல் நாள் கடைப்பிடிக்கப்படும் இந்தப் பண்பாட்டு விழாவில் கோவில் அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்குச் சொந்தமான மட்டுவிலில் உள்ள வயலுக்குச் செல்வார்கள்.

அந்த வயலில் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து கந்தனுக்கு படையல் செய்து பூசைகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்குதல் மரபாக பண்பாட்டு விழாவாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்தப் புதிர் விழா 288ஆவது ஆண்டாக இந்த வருடமும் கடைப்பிடிக்கப் பட்டது.






ஆனந்தராணி பாலேந்திரா (UK)

# பசி நாடகம்- 1978



கடந்த ,தழில் தமிழக நாடக ஆளுமை பேராசிரியர் இந்திரா பார்த்தசாரதி எழுதி க. பாலேந்திரா நெறிப்படுத்தி நான் நடித்த ‘பசி’ நாடகத்தின் கதையை எழுதியிருந்தேன். பேராசிரியர் இந்திரா பார்த்தசாரதி அவர்கள் எழுதிய மற்றுமொரு நாடகமான ‘மழை’ நாடகத்தை ஏற்கனவே இலங்கையில் 1976 இல் பாலேந்திரா நெறியாள்கை செய்து மேடையேற்றியிருந்தார். இதில் பாலேந்திராவுடன் நானும் நடித்திருந்தேன்.

‘பசி’ நாடகத்தில் மேடைப் பொருட்கள் எல்லாம் ஊமமாகத்தான் காட்சிப்படுத்தப்படும். இல்லாத பொருளை இருப்பது போலப் பாவனை செய்து கையாள்வது கஷ்டந்தான். இதில் வரும் நாய்க்குட்டியும் பாவனைதான். ஸ்வெட்டர் பின்னுவதில் இருந்து நாய்க்குட்டியைப் பராமரிப்பது என்று எல்லாமே ஊமம். ஒத்திகையின் ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. செய்வதைச் சரியாகச் செய்ய வேண்டும். இதனால் ஸ்வெட்டர் பின்னும் பாவனைக்காக மப்ளர் பின்னப் பழகினேன்.

இந்த நாடகத்தில் ஒரு இடத்தில் நான் தாலாட்டுப் பாடி நாய்க்குட்டியை நித்திரையாக்க வேண்டும். நான் முதன்முதலாக மேடை நாடகத்தில் பாடியது ‘பசி’ நாடகத்தில்தான். பின்னர் பாலேந்திரா நெறிப்படுத்திய ‘யுகதா்மம்’ நாடகத்தில் பாடகர் குழுவில் ஒருவராகப் பல மேடையேற்றங்களில் பாடினேன். பலருடனும் சேர்ந்து கோரஸாகப் பாடுவது வேறு. ‘பசி’ நாடகத்தில் நான் தனியாகப் பாட வேண்டும். முதலில் ஒரு சிறு தயக்கம் இருந்தது. நான் பரதநாட்டியம் பயின்றிருந்த காரணத்தால் அதற்கு சங்கீதம் கற்றிருப்பது அவசியம் என்று கொழும்பில் வசித்தபோது சிறிது காலமும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் சங்கீதம் கற்று வந்தேன்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் நான் வசித்த அதே தெருவில் சில வீடுகள் தள்ளி மிகப் பிரபலமான சங்கீத ஆசிரியை சங்கீதவித்வான் திருமதி. சரஸ்வதி பாக்கியராசா அவர்கள் வசித்து வந்தார். அவரிடம் அப்போதுதான் மீண்டும் கர்நாடக சங்கீதத்தைக் கற்க ஆரம்பித்திருந்தேன். திருமதி. சரஸ்வதி பாக்கியராசா அவர்கள் தமிழ்நாடு கர்நாடக இசைக்கல்லூரியில் சங்கீதம் பயின்று First class Honours இல் சித்தியடைந்த முதலாவது இலங்கையர் என்ற பெருமையைப் பெற்றவர். யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் சிரேஷ்ர விரிவுரையாளராகப் பணியாற்றியவர். அத்துடன் வட இலங்கை சங்கீத சபையின் சிரேஷ்ட பரீட்சை மேலதிகாரியாகவும் கடமையாற்றியவர். அந்தக் காலத்தில் இலங்கையில் கோயில்களில் பெண் கலைஞர்கள் கர்நாடக இசைக் கச்சேரிகளை நிகழ்த்தத் தயங்கிய காலத்தில் மிகத் துணிச்சலுடன் கோயில்களில் பாடி ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர். அவரிடம் நான் தனியாகவும் குழுவாகவும் பாட்டுப் பயின்றேன். கண்டிப்புடன் பயிற்றுவிப்பார். அவரின் பயிற்சியும் எனக்கு நாடகத்தில் பாடுவதற்குத் துணை செய்தது.

‘பசி’ நாடகத்தில் நான் பாடும்
தாலாட்டுப் பாடல்..
மன்னு புகழ் கௌசலை தன்
மணி வயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன் முடிகள் செய்து
வித்தாய்! செம் பொன் சேர்
கன்னி நன் மாமதின் கண்மணியே
கண புரத்து என் கண்மணியே
என்னுடைய இன்னமுதே
இராகவனே தாலேலோ.

‘பசி’ நாடகத்தில் ஒரு கட்டத்தில் பாலேந்திராவும் பாடவேண்டும். அவர் பாடிக்கொண்டு ஆடவும் வேண்டும். அந்தப் பாடல் ஒரு கிராமிய மெட்டில் அமைந்திருந்தது. ‘பசி’ நாடகம் முதன்முதலாக 27–12–1978 அன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறி நல்ல வரவேற்பைப் பெற்றது.

இந்த நாடகத்தை 12–03–1979 இல் பேராதனை பல்கலைக்கழகத்தில் பாலேந்திரா மேடையேற்றினார். பேராதனையில் பெரும்பாலும் மாணவர்களும் ஆசிரியர்களுமே பார்வையாளர்களாக வருவது வழக்கம். இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் வந்து அங்கு கல்வி கற்கும் இந்தத் தமிழ் மாணவர்கள் மிக ஆர்வமாக நாடகம் பார்க்க வருவார்கள். ஏற்கனவே நான் நடித்த ‘பிச்சை வேண்டாம்’, ‘மழை, ‘நட்சத்திரவாசி’ ஆகிய நாடகங்கள் அங்கு மேடையேற்றப்பட்டிருந்தன. பேராதனை பல்கலைக்கழகத்தில் நாடக மேடையேற்றங்களுக்குப் போகும்போது நான் அங்குள்ள பெண்கள் விடுதியில் தங்குவது வழக்கம். நாடகத்தில் நடிக்கும் நடிகை அங்கு தங்கியிருக்கிறார் என்ற செய்தி தமிழ் மாணவிகள் மத்தியில் பரவி பெரும்பாலான மாணவிகளும் நாடகம் பார்க்க வருவார்கள். பின்னர் அது பற்றி விமர்சனங்களும் இடம்பெறும். பேராதனை மேடையேற்றத்தின்போது நாடகத்தில் நாய் குரைப்பது போல அடிக்கடி சத்தம் வரும்போது பார்வையாளர்கள் மத்தியில் இருந்து யாராவது நாய் போலக் குரைத்தால் என்ன செய்வது என்று எனக்குள் ஒரு பயம் இருந்தது. ஒருவர் அப்படி ஒலி எழுப்பினாலும் போதும். எல்லாமே குழம்பிவிடும். ஆனால் வந்திருந்த மாணவர்கள் மிக அமைதியாக இருந்து நாடகத்தைப் பார்த்து ரசித்தது மகிழ்ச்சியாக இருந்தது. இது நேர்த்தியான நாடக அளிக்கைக்குக் கிடைத்த வெற்றி என்று சொல்லுவேன்.

‘பசி’ நாடகம் இலங்கையில் யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை, பேராதனை ஆகிய இடங்களில் 6 தடவைகள் மேடையேற்றப்பட்டது. திருகோணமலையில் பொங்கல் விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் ‘பசி’ நாடகம் மேடையேறியது. கொட்டும் மழையிலும் மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள்

முன் இந்த நாடகத்தில் நடித்தது மறக்க முடியாத அனுபவம். மேடையின் ஒரு ஓரத்தில் கூரையில் இருந்து மழை நீர் ஒழுக அதை ஏந்துவதற்கு வாளி ஒன்றை வைத்திருந்தார்கள். மழை நீர் விழும் ஓசை நாடகத்திற்கு இசையாக அமைந்தது.

நாங்கள் லண்டனுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் ‘பசி’ நாடகத்தை பாலேந்திரா மீளத் தயாரித்தார். நாம் இருவருமே தொடர்ந்தும் நடித்தோம். லண்டனிலும் சுவிற்சர்லன்ட், நேர்வே, ஒஸ்ரேலியா, கனடா ஆகிய நாடுகளிலும் நடைபெற்ற எமது நாடக விழாக்களில் ஒரு நாடகமாக 9 தடவைகள் மேடையேற்றப்பட்டது.

மிகுதி அடுத்த இதழில்...

எமது அடுத்த கப்பல் 2022 பெப்ரவரி இறுதி வாரத்தில் செல்ல உள்ளதால் அதற்கு முன்பு உங்கள் பொதிகளை
எமது RAJU PARCEL SERVICE ஏஜெண்டுகளிடம் 10.02.2022 ற்கு முதல் ஒப்படைக்கவும்




காதலர் தின வாழ்த்துக்கள் | Happy valentine's Day Feb.14







காற்றுக்கும் இலைக்கும் காதல். தட்டிவிட்டு சேர்ந்திருந்து பறந்து சென்றுவிடும். மீண்டும் மீண்டும் தன் கவனத்தை காட்டிச் செல்லும். கடற்கரைக்கும் அலைக்கும் காதல். வந்து வந்து மீண்டும் பிரிந்து சென்று விடும். தொடர்புகள் அறுவதில்லை. தொடர்ந்து இருப்பதும் இல்லை. பூமியைச் சூரியன் நெருங்க விட்டதில்லை. தூரப் போக அனுமதி தந்ததில்லை. சுற்றிச் சுற்றி வட்டமிடும் நிலை புரிந்திருந்தும் கண்காணிப்பில் வைத்துக் கொண்டே இருக்கின்றது. அணைப்பதில் சுகம் இருந்தாலும் அணைக்க விடுவதில்லை. இப்படி எத்தனையோ காதலர்கள் இளமையில் கண்ட காதலை தொடவும் முடியாது, தொலைக்கவும் முடியாது தொடருகின்றனர். தண்டவாளம் இரண்டும் ஒன்றாகச் சேர்வதில்லை. இங்கு காமம் போனது காதல் இருக்கின்றது. முறையற்ற காதலினால், இடைநடுவே முறிந்து போன காதலும் கணக்கில்லை. முடிவுரை எழுதி திருமணத்தில் கரைந்து போன காதலும் பல.

காதலினால் சாகாம லிருத்தல் கூடும், கவலைபோம். அதனாலே மரணம் பொய்யாம். என பாரதி குயில்ப் பாடலிலே பாடினார். இது ஒரு புறம் இருக்க எந்த உயிர்களுக்கும் காதல் உணர்வு பொதுவானது

**''காக்கை குருவி எங்கள் ஜாதி – நீள்**
**கடலும் மலையும் எங்கள் கூட்டம்**
**நோக்கும் திசையெலாம்**
**நாமன்றி வேறில்லை**
**நோக்க நோக்கக் களியாட்டம்''**

என்று உயிர்கள் எல்லாம் ஒன்றிலிருந்துதான் பலவாகிப் பெருகின. அதனால் எல்லாமே எங்கள் ஜாதி என்று பாரதி பாடினார்.

எங்கள் வீட்டுப் பலகணையில் ஒரு பறவை பறந்து வந்து அமர்ந்தது. சற்று நேரங்கழித்து அதனருகே இன்னுமொரு பறவை வந்தமர்ந்தது. தன் காதலன் வந்தமர்ந்ததைப் பார்த்த பறவை சற்று நகர்ந்தது போய் நின்றது. அதுவும் விடாது கிட்டக் கிட்ட நெருங்கியது. ஊடலின் அழகான காட்சியை அமைதியாய்க் கண்காணித்தேன். நீண்ட நேர சம்பாஷணையின் அந்நியோன்யத்தின் உச்சத்தில் இறுதியாக இருவரும் ஒன்றாகப் பறந்து சென்ற காட்சி. ஊடலும் அதன்பின் வரும் கூடலும் உச்சக் காதலை உணர்த்தும் என்பதை நேரடியாக உணரக்கூடியதாக இருந்தது.

**''துடிஅடிக் கயந்தலை**
**கலக்கிய நன்னீரைப்**
**பிடிஊட்டிப் பின் உண்ணும்**
**களிறு, எனவும்**
**உரைத்தனரே''**

என்னும் பாடலில் குட்டியானை கலக்கிய நீரை பெண் யானைக்குக் கொடுத்து மீதமிருந்தால் தான் உண்ணுகின்ற ஆண்யானையின் காதலை கலித்தொகை எடுத்துக் காட்டுகின்றது.

**சுனைவாய்ச் சிறுநீரை**
**எய்தா தென்(று) எண்ணியப்**
**பிணைமான் இனி துண்ண**
**வேண்டிக் – கலைமாத்தன்**
**கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர்**
**காதலர்**
**உள்ளம் படர்ந்த நெறி**

சுனைநீர் சிறிதளவே இருக்கின்றது. தாகத்தில் இருக்கும் பெண்மான் தன்னை எண்ணிக் குடிக்காது என்று எண்ணிய ஆண்மானானது அச்சுனைநீரில் வாயை வைத்துக் குடிப்பது போன்று பாசாங்கு செய்கின்றது என்பதை இப்பாடல் மூலம் மறைப்பொறையனார் ஐந்திணை ஐம்பதில் பாடினார்.

காதல் கொண்ட மான்களுக்கு உள்ள ஒரு வழக்கம் ஒரு பெண்மனைத் துணைக் கொள்ள எண்ணிய மான்கள் பெரிதான சத்தமிட்டுக் கத்துகின்றன. எந்த மான் பெரிதாக கத்துகின்றதோ, அந்த மானையே பெண்மான் கூடுமாம். ஆண்மான்கள் பெண்மான்கள் அறுகம்புல்லைத் தின்னுமாறு செய்து, தெளிந்த நீர் ஓடுகின்ற கானாற்றின் மணற்கரையிலே தூங்கச் செய்து அவ்வாறு தூங்கும் போது இடையூறு வராதபடி காவலும் காத்து நிற்கின்றன. இதேபோல் பெண்யானையின் பசியையும் கன்றின் பசியையும் தீர்ப்பதற்காக ஆண்யானை முற்றாத மூங்கிலின் முளையைத் தந்து அன்போடு உண்ணச் செய்விக்கும். இவ்வாறு அகநானூறு பாடல்கள் பல உயிரினங்களின் காதலை அழகாக எடுத்துக்காட்டுகின்றன.

இந்தோனேசியாவில், பலினீஸில் மானுக் தேவதா என்னும் தெய்வங்களின் பறவை என்று அழைக்கப்படும் பறவையானது, ஒரு துணையை ஈர்க்க முயற்சிக்கும்போது ஒரு இடத்தைத் தெரிவு செய்கின்றது. அந்த நிலத்திலே கிடக்கின்ற சுள்ளி, கல் போன்றவற்றையெல்லாம் தன்னுடைய சொண்டினால் அகற்றித் துப்பரவு செய்த பின் அந்த இடத்திலே நின்று நடனமாடவும் பாடவும் செய்கிறது. அந்நடனத்தில் மயங்கிய பெண் பறவை இந்நடனத்தில் மயங்கி அதனோடு இணைந்து நடனமாகி ஒன்றிணைகின்றது. இதேபோல் ஆண் மூட்டைப்பூச்சியின் இனப் பெருக்க உறுப்பு ஒரு கம்பி போன்று கூர்மையானது. இந்த ஆண் மூட்டைப் பூச்சியானது காதல் கொண்ட பெண் மூட்டைப்பூச்சியின் அடி வயிற்றிலே இந்தக் கம்பி போன்ற கூர்மையான பகுதியால் குத்தி விந்தணுக்களை உள்ளே செலுத்திவிடும். இந்த இடம் காயப்பட்டு பெண் மூட்டைப்பூச்சிக்குத் தாங்க முடியாத வலியை ஏற்படுத்திச் சில கணங்களில் மறைந்து போகும். இது இயற்கை அதற்கு அழித்திருக்கும் கொடை ஆகும். தாம் விரும்பிய காதலியை அடையக் காதலர்கள் நடத்துகின்ற நாடகங்களை இந்த ஆண் மூட்டைப் பூச்சி காட்டித் தருகின்றது.

பாலியல் முதிர்ச்சியடைந்த நத்தைகளின் தலைப்பகுதியில் Dart Sac என்னுமொரு பை இருக்கிறது. அதறற்குள் ஒரு கூர்மையான கம்பி போன்று இருக்கின்றன. இது லவ் டொட்ஸ் எனப்படுகின்றது. இந்த லவ் டொட்ஸை மற்றைய நத்தையின் தலையிலே செலுத்தும். அப்பொழுது அதற்குள் இருக்கும் ஹார்மோன் நத்தைக்குள் செல்லும் அதற்குள் இருக்கும் விந்தணுக்கள் மற்றைய நத்தைக்குள் பரவுகின்றன. காதலைப் பரிமாறும் இந்த வித்தை நத்தைகளுக்கே உரியன. இவ்வாறு உலகத்திற் பிறந்த அனைத்து உயிர்களிடத்திலும் காதல் மேம்பட்டிருப்பதையும் அதன் மூலம் உயிர்களின் விருத்தியையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றன.

இவ்வாறு காதலுக்காகத் தம்மைத் தியகம் செய்வதும், விட்டுக் கொடுப்பதும் காலம் காலமாக அனைத்து உயிர்களிடத்திலும் காணப்படுகின்ற பண்பு. தலைவனிடம் காதல் கொண்ட தலைவி அவன் தன்னை மணப்பானோ என்று அறிய தரையிலே மண் பரப்பி தன்னுடைய கண்களை மூடி விரலினால் வட்டம் வரைவாள். தொடங்கிய இடத்தில் விரல் போய் நிற்க வேண்டும். அப்போது தலைவி நினைத்தது நடக்கும் இதனைக் கூடல் இழைத்தல் என்று கூறுவார்கள்.

21 ஆம் பக்கம் பார்க்க...






# காதல் செய்வீர் உலகத் தீரே!

**அஃதன்றோ இவ்வுலகத் தலைமையின்பம்?**

திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார் என்பது போல பாரதியின் வரிகளுக்குள் இழையோடும் காதலில் துய்த்து துறந்து இன்புறாமால் எவரும் இருக்க முடியாது. அமைதியின் அடிவாரத்தில் குதூகலிக்கும் ஆடல் போல, அன்பின் வழியது உயிர்நிலையாகி வழிகிறது காதல்.

கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல.காதலின் மொழிக்கு முன்னால் உலகத்து மொழிகள் யாவும் அடங்கிச் சரணடையும். அங்கு பேசப்படுவதெல்லாம் இருவிழி ஜன்னல் வழி ஆத்ம நூலை பருகிக் கொண்டிருக்கும் ஏகாந்த மொழி.

குறிப்பினிலே ஒன்று பட்டு , கூட்டுக் களியினிலே பாட்டும் கூத்தும் என இன்ப புரிக்கு கூட்டிச் செல்லும் காதல் சுவையை சொற்களுக்குள் அடக்கும் வித்தை அறிந்தவர் பாரதி

காதலினால் மானுடர்க்குக்
கலவி யுண்டாம்
கலவியிலே மானுடர்க்குக்
கவலை தீரும்
காதலினால் மானுடர்க்குக்
கவிதை யுண்டாம்
கானமுண்டாம் சிற்பமுதற்
கலைக ளுண்டாம்
ஆதலினால் காதல்செய்வீர்
உலகத் தீரே
அஃதன்றோ இவ்வுலகத்
தலைமை யின்பம்?
காதலினர்ல் சாகாம லிருத்தல் கூடும்
கவலைபோம், அதனாலே மரணம்
பொய்யாம்.

காதல் கொள்வதே இவ்வுலகில் கிடைக்கப்பெறுகின்ற முதன்மையான மிகப் பெரிய இன்பம் என்று உணர்ந்து உரைக்கும் பாரதி அதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. தேவர்களுக்கு கூட மாதரின்பம் போல பிறிதொரு இன்பம் உண்டோ ? என்று சொல்லி வியக்கிறார்.

வானோர்க் கேனும்
மாதரின்பம் போற்பிறிதோர்
இன்பம் உண்டோ?

காதல்செயும் மனைவியே
சதி கண்டீர்
கடவுள்நிலை அவளாலே
எய்த வேண்டும்.

ஆம், உயிரினும் இந்த பெண்மை இனிதடா என்று கொண்டாடியவர் எப்போது மனைவிக்கு கடிதம் எழுதினாலும் எனதருமைக்காதலி செல்லம்மாளுக்கு ஆசீர்வாதம் என்று சொல்லித்தான் ஆரம்பிப்பார், உனதன்பன்' என்று கூறித்தான் முடிப்பாராம்.

தேடிக் கிடைக்காத சொர்ணமே உயிர்
சித்திரமே மட அன்னமே
கட்டியணைத் தொரு முத்தமே –
தந்தால் கை தொழுவேன்
உனை நித்தமே!



மிக பெரிய அதிசயமாய் , எப்படி எவ்வாறு எங்கு எப்போது தோன்றியது என எண்ண எண்ண வியக்க வைக்கும் அரிய பொருளாய் இருக்கிறது முத்தம். ஆதலினால் இவ்வுலகில் பகைமை ஒழியும். காதல் களியில் கலி தீரும்.

காதலிலே இப்மெய்திக்
களித்து நின்றால்
கனமான மன்னவர்போர்
எண்ணுவாரோ?
மாதருடன் மனமொன்றி
மயங்கி விட்டால்
மந்திரிமார் போர்த்தொழிலை
மனங்கொள் வாரோ?
பாதிநடுக் கலவியிலே காதல் பேசிப்
பகலெல்லாம் இரவெல்லாம்
குருவி போலே
காதலிலே மாதருடன் களித்து
வாழ்ந்தால்
படைத்தலைவர் போர்த்தொழிலைக்
கருது வாரோ?

காதலர்க்கு மிக இனிமை தருவது, காற்றுகூட இடையில் நுழைய முடியாத அளவுக்கு இருவரும் இறுகத் தழுவி மகிழ்வதாகும் என்ற வள்ளுவன் வாசகத்திற்கு இணங்க ஆரத்



தழுவி அமர நிலை காண்போம் என அடிக்கடி சொல்லி தன்னை இழக்கிறார் பாரதி.

வனத்தின் வாசமும் வானத்தின் வண்ணமும் வீசிக்கொண்டு வரும் வரம் காதல். பிரபஞ்சத்தின் முழு நிலவு காதல். கடலலை நடுவே நாட்டியமாடும் வெண்திரை போல ஆத்மாவின் அமைதியில் கூத்தாடிக்கொண்டிருக்கிறது காதல்.

உவமையில் அரியாய், உயிரினும்
இனியாய் என்று மையல் கொள்ளும்
போது ஒரு பெண்ணின் காதலை
பெறக்கூடிய ஆண் தான் இப்புவியில்
மிகவும் அதிஷ்டசாலி ஆகிறான்.

ஒருவருடனான காதல், பலரோடும்,
பலவற்றோடும்,
இப்பிரபஞ்சத்தோடும் என விரியும்
போது தென்படும் வெளியில் வாழ்க
காதல் என்று கூத்தாடியவர் பாரதி.

காதலித்து பார்' என்பதற்கும் காதலாகி கிடத்தல் என்பதற்குமான வித்தியாசாத்தை உணர்த்தவல்ல உன்னதமாய் ஜொலிக்கிறது பாரதியின் காதல்.

'பார்க்கும் இடமெல்லாம்
நந்தலாலா'

வாழ்தலை இனிதென ஆக்குவது காதல், ஆதலால் காதல் செய்வோம் வாழ்வோம். செவ்விது செவ்விது செவ்விது காதல்.




Dortmund மாநகரில் மளிகை உலகின்
BIGG BOSS
மலிவும் தரமும்
என்றும் உங்கள் TKS
TKS BEST FOODS
காதலர் தினத்தை முன்னிட்டு
மாசி மாத சிறப்பு சலுகை
100€ க்கு மேல்
கொள்வனவு செய்பவர்களுக்கு
149€
பெறுமதியுள்ள
V BOX 85€* கிடைக்கும்
* கையிருப்பு உள்ளவரை மட்டுமே!
வாடிக்கையாளர் மற்றும் நண்பர்கள்
அனைவருக்கும்
காதலர் தின நல்வாழ்த்துகள்
Rheinische Str.79-44137-Dortmund
tksbestfoods
0049 231 950 468 83
www.tksbestfoods.de
tks-bestfoods@web.de

# உலகின் புதிய குடியரசாக பார்படோஸ் பிரிட்டன் ஆளுகையிலிருந்து வெளியேறியது!

வைரமுத்து சிவராசா
(யேர்மனி)

## கரிபியன் கடற்பரப்பில் ஒரு புதிய நாடு உதயம்!..

இவ்வளவு காலமும் பிரித்தானிய அரசி 2வது எலிசபெத்தின் ஆளுகையிலிருந்த (Barbados) பார்படோஸ் குட்டிநாடு 1.12.221 தொடக்கம் உலகில் புதிய நாடாக உருவாகியுள்ளது. மத்திய அமெரிக்கா–கரிபியன் கடற்பிராந்தியத்தில் மேற்கிந்திய தீவுகளில் பல குட்டித் தீவுகள் காணப்படுகின்றன. இதில் ஒரு தீவுதான் பார்படோஸ் என்று அழைக்கப்படும் தீவுதான் இது. அப்போது உலகின் கடலாதிக்கத்தில் முன்னணிநாடக விளங்கிய பிரித்தானியா இந்தத்தீவை





17ம்நூற்றாண்டளவில் தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தது. ஆபிரிக்க கறுப்பினத்தவர்களை அடிமைகளாக அழைத்துவந்து இந்தத் தீவில் குடியேற்றினார்கள், அவர்களின் கடும் உழைப்பைப் பயன்படுத்தி இத்தீவை செழிப்புமிக்க தீவாக மாற்றினார்கள்.

பிரித்தானிய சாம்ராச்சியத்திலிருந்து 1966ம்ஆண்டு சுதந்திரமடைந்தாலும் பிரித்தானிய அரசின் ஆளுமைக்குட்பட்ட தாகவே இருந்து வந்துள்ளது. தற்போது பிரிததானிய ஆதிக்கத்திலிருந்து விலகி குடியரசு நாடாக 1.12.2021 அன்று அதிகாரம்மிக்க தனிநாடாக அறிவித்துள்ளது. தற்போது இது பார்படோஸ் ஜனநாயகக் குடியரசு என்ற பெயருடன் உதயமாகியுள்ளது. இந்தப் பிரகடன விழாவில் மகாராணியின்சார்பில் பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் (Prinz Charles) உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக அமெரிக்க பாடகியும் 9 தடவைகள் உலக கிராமி விருது (Grammy Award) பெற்றவரான றெகினா (Rihanna) கலந்துகொண்டார்.

## இனி இத்தீவைப்பற்றிச் சிறிது பார்ப்போம்..

14.5.1625 ம்ஆண்டுதான் பிரித்தானியா இந்தத் தீவைக் கைப்பற்றியிருக்கிறார்கள். குட்டித்தீவான இந்த நாட்டின் நீளம் 34 கி.மீ அகலம் 23 கி.மீ பரப்பு 432 ச.கி.மீ, தலைநகர் பிறைட்ரவுண் (Bridgetown) சனத்தொகை 2 லட்சத்து 88 ஆயிரம்பேர். அரச மொழியாக ஆங்கிலம் விளங்குகின்றது.

இந்தத்தீவின் தற்போதைய ஆளுநராக Sandra Mason என்பவரும் அதிகாரம் படைத்த பிரதமராக Mia Mottley என்பவரும் பதவியில் உள்ளார்கள். பல அரசியல் கட்சிகள் இருந்தாலும் தற்போது ஆளும் கட்சியாக இருப்பது பார்படோஸ்–தொழிற்கட்சியாகும். இந்தத்தீவில் இனத்தவர்களைப் பார்த்தால் கறுப்பு 91 வீதம், வெள்ளை 4 வீதம், கலப்பு 3.5 வீதம், இந்தியர்கள் 1 வீதம் மிகுதி ஏனைய இனத்தவர்கள். சமயம் 75 வீதம் கத்தோலிக்கம், 20 வீதம்பேர்



எந்தச் சமயமும் சாரதவர்கள்.மிகுதி ஏனைய சமயத்தவர்கள்.

இந்த நாட்டின் பொருளாதாரம் மதுபானங்கள் உற்பத்தி ஏற்றுமதி, கபபல் வணிகப்போக்குவரத்து, மீன்பிடி, மருந்து மூலிகை உற்பத்தி ஏற்றுமதி, தங்கம்,சீமெந்து மருந்து, கடதாசி போன்றவையும் உற்பத்தி ஏற்றுமதி, சுற்றுலாத்துறை வருமானம் எனக் கிடைக்கின்றது. தொழில்நுட்பம், கல்வியைப் பொறுத்தளவில் முற்று முழுதான பிரித்தானிய பாடத்திட்டமாகும்.

உலகின் பணக்காரர்கள் நாட்டுவரிசையில் இந்தநாடு 52வது இடத்திலும் பொருளாதார வளம் நிறைந்த நாடுகள் பட்டியலில் 83வது இடத்திலும் இருக்கின்றது.












சேவியர்
(தமிழ்நாடு)

நடுப்பக்கம்

# காதல் எல்லாம் கல்யாணத்தில் முடிவதில்லை

காதல் எல்லாம் கல்யாணத்தில் முடிவதில்லை. எல்லா காதலும் கல்யாணத்தில் முடிந்திருந்தால் என்ன நடக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

ஆரம்பப் பள்ளியின் அரும்பு நாட்களில் கண்களுக்குள் சின்ன மின்மினிக் காதல் ஒன்று விட்டு விட்டு ஒளிகொடுக்கும். கணக்கு பாடத்தின் விடையைக் காட்டிக் கொடுத்ததன் மூலமாகவோ, இருந்த இனிப்பை இரண்டாய் ஒடித்து பாதி கொடுத்த பாசத்தின் பார்வையிலோ அந்த மின்மினிகள் தோன்றியிருக்கலாம். காமத்தின் அரிச்சுவடி கூட அருகில் நுழையாத, இனக்கவர்ச்சியின் இனம் என்ன என்பதே புரியாத பால்யத்தின் புனிதக் காதல் அது.

ஐந்தாம் வகுப்பின் பிரியாவிடை கணங்களில் சொல்ல முடியாத ஏதோ ஒரு இழப்புடன் விலகிப் போகும் அந்த காதல். காலத்தின் சாரட் வண்டியில் யாராரோ ஏறி இறங்கிப் போன்பின்பும் அந்த முதல் காதலின் மெல்லிய சத்தமும், அந்த முதல் காதலியில் மறந்து போகாத பெயரும் மனதுக்குள் ரீங்காரமிடும். அந்த ஆரம்பப் பள்ளியை எப்போதேனும் கடக்கும் கணங்களில் சட்டென மீண்டும் கண்ணுக்குள் எட்டிப் பார்த்துச் செல்லும் அந்த மின்மினிக் காதல்.

இரண்டாவது காதல் பதின் வயதுகளின் படிகளில் பல்லாங்குழி ஆடும். ஹார்மோன்கள்



சக்திமான்களாக புஜம் உயர்த்தும் பொழுதுகளில் இந்தக் காதல் கனவுகளுக்குள்ளே கற்பனைகளையும், கற்பனைகளுக்குள்ளே கனவுகளையும் ஒளித்து வைத்து மாயாஜாலம் காட்டும். இதுதாண்டா காதல் என பள்ளிக்கூட தாவணி தேவதைகளின் பின்னே அரும்பு மீசை பாரதிராஜாக்களாக அலையவிடும்.

கடைக்கண் பார்வை போதும் இடுக்கண் எல்லாம் நீங்கும் என இலக்கியம் பேசும். கள்ளிமுள்ளில் காதல் கிறுக்கி, காம்பஸால் மேஜை கிறுக்கி, நாளெல்லாம் கவிதை கிறுக்கி இந்தக் காதல் கிறுக்கு தேசத்தில் கிறு கிறுக்க வைக்கும். காதலுக்கும், காமத்துக்கும் வெகு அருகில் உலவும் இந்தக் காதல் இரண்டையும் விட உயர்வாய் இதயத்தில் பச்சை குத்தும்.

கல்லூரிக் காதல் கலர்புல் காதல். பரவச தேசத்தின் பளிங்கு மாளிகையில் கனவுகளின் தாயம் உருட்டி விளையாடும் காதல். குறைந்த பட்சம் ஒரு காதல் என்பது கல்லூரிக் காதலின் கணக்கு. மேலதிகக் காதல் என்பது சுகமான அவஸ்தை அல்லது அவஸ்தையான சுகம். தற்குறிப்பேற்ற அணிகளும், இல்பொருள் உவமை அணிகளும், உவமைத் தொகைகளும் கவிதைகளாய் பொழியும் காலம் இது. அணி என்பதே அழகுதானே, உன்னை அணிகளால் அழகு பார்க்கவா, அணியாமல் அழகு பார்க்கவா என சிலேடை சில்மிஷங்கள் உலவும் காதல். நல்லவேளை காதல் எல்லாம் கல்யாணத்தில் முடியவில்லை. கல்யாணம் முடிந்து குழந்தை குட்டிகளுடன் வாழ்வின் உன்னத வாழ்க்கை வாழும் எல்லா மனங்களுக்குள்ளும், ஏதோ ஒரு மூலையில் பரவசம் ஊட்டும் பச்சைய நினைவுகளாய் இந்தக் காதல்கள் கண்ணாமூச்சி ஆடுகின்றன. நீ இமைக்கும் அழகைக் காண்பதற்காகவே

இமைக்காமல் கிடக்கின்றன என் இமைகள் என வந்து விழுகின்ற கவிதை வரிகளில் ஏதோ ஒரு பால்ய காதலின் வாசம்.

இந்தக் காதல்கள் தான் வாழ்க்கையை அழகாக்குகின்றன. இந்தக் காதல்கள் தான் காதலை அர்த்தப்படுத்துகின்றன. இந்தக் காதல்கள் தான் ஒரு மனிதனை ரசனைவாதியாகவோ, இலக்கியவாதியாகவோ, கலைஞனாகவோ, ஓவியனாகவோ, சிற்பியாகவோ மாற்றுகின்றன.

பால்ய காலக் காதல்களின் வேர்களிலிருந்து தான் இலக்கியவாதிகள் தங்களுக்கான விருதுப் படைப்புகளை உறிஞ்சி எடுக்கின்றனர். திரை இயக்குனர்களின் கனவுப் படைப்புகள் பெரும்பாலும் அவர்களின் கனவுகளில் புரண்டு படுக்கும் காதலின் பெருமூச்சுகளே. கவிஞர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். பால்யக் காதல் இல்லாத கவிஞர்கள் பாலையில் சாகுபடி செய்யும்

17 ஆம் பக்கம் பார்க்க...

FRESH BARBER LÜDENSCHEID



ஆண்கள் பெண்களுக்கான
எங்கள் சிகை அலங்காரம்
உங்களை அழகின்
சிகரத்தில் ஏற்றிவிடும்.



FRESH BARBER LÜDENSCHEID
Werdohler Str.86
58511 Lüdenscheid.Germany
Tel:02351 894 81 23

Öffnungszeiten: Di-Fr: 9.00-18.30 Uhr | Sat.8.00-16.00 Uhr

பரிதாபத்துக்குரியவர்கள். எல்லாக் காதலையும் சொல்ல முடியாது. எல்லாக் காதலையும் வெல்ல முடியாது. காதல் என்பது காற்றைப் போல, அரைகிலோ காற்றை அளந்து தர முடியாது. காதல் மின்சாரம் போல, நாலு மீட்டர் மின்சாரத்தை வெட்டிக் காட்ட முடியாது. காதல் என்பது உணர்வு. தோல்வி என்பது நாமாகவே சொல்லிக் கொள்வது. நந்தவனத்தில் நடப்பது போன்றதே காதலில் பயணிப்பது. ஓர் முறை நடந்த சிலிர்ப்பு மறையப் போவதில்லையே.

நல்லவேளை எல்லாக் காதலும் கல்யாணத்தில் முடிவதில்லை. காதல் பிரமிப்புகளை மட்டுமே வரிசையாய் வைக்கும். கல்யாணம் ரேஷன் கடைகளிலும் வரிசையில் நிற்க வைக்கும். காதல் சிரிப்புகளின் சின்ன தீவு, திருமணம் வாழ்க்கையின் நெரிசல் வீதி. காதல் அருவியின் ஆக்ரோஷம், திருமணம் தண்ணீரின் தடுமாற்றம்.



# காதல் எல்லாம் கல்யாணத்தில் முடிவதில்லை

காதல் விருப்புகளின் அனுமதிச் சீட்டு, திருமணம் பொறுப்புகளின் கூட்டுத் தொகை.

எல்லாக் காதலும் கல்யாணத்தில் முடிவதில்லை. ஆனால், எல்லா கல்யாணங்களும் காதலில் தொடங்குகின்றன !

இது இரண்டாம் பாகம். எழுதிக் கிழித்தவைகளை புறந்தள்ளிவிட்டு புதிதாய் பதிப்பிக்கப் போகும் கவிதைத் தொகுப்பு. மாங்கல்ய முடிச்சிட்டு, இடைவெளி அவிழ்த்து புலன்களின் வாய்க்கால்களின் புதிதாய் பதியமிடப்போகும் நாற்று. இது காதலின் கூட்டுத் தொகை. பால்யக் காதலின் புனிதமும், பதின் வயதுக் காதலின் பரவசமும், கல்லூரிக் காதலின் சில்மிஷமும் இணைந்து ஊட்டும் கூட்டாஞ்சோறு. திருமணத்தில் செயல்படுத்தத்தான் அத்தனை முன்காதலின் முகவுரைகளா ?

கடந்து வந்த பாதைகளின் இனிமைகளை எடுத்து, கல்யாண வாழ்க்கையின் வீதிகளில் விதைப்பவர்கள் வலுவான திருமண வாழ்க்கையை அறுவடை செய்கின்றனர். அதுவே



காதலுக்குச் செய்யும் மரியாதையும் கூட. கடந்த காதல்களின் இனிமையை மறந்து காயங்களில் மட்டுமே கூடு கட்டிக் குடியிருப்பவர்கள் திருமணத்தை மட்டுமல்ல காதலையே காயப்படுத்துகின்றனர்.

**எல்லாக் காதலும் கல்யாணத்தில் முடிவதில்லை.**
**எல்லா கல்யாணங்களும் காதலில் தொடங்குகின்றன !**

---

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# உண்மையைச் சொல்லுங்கள்
## உங்களுக்கு மட்டும் தான் நேரம் இல்லையா!

கதைத்தபடி, கிழங்கு வெட்டும் கத்தியால், அல்லது கத்தியால், வெட்டி தள்ளுவார்கள். ஒன்று கிழங்கு இங்கு மலிவு. மற்றது மினக்கிட நேரம் இல்லை. எங்கட அம்மா நேரம் போனாலும், கல்லரிக்கும் சட்டியில் ஒவ்வொரு கிழங்காகத் தேய்த்து தேய்த்து, தோல் உரிப்பா. அதற்காக உங்களையும் தேய்க்கச் சொல்லவில்லை. வெட்டும்போது கழிவு குறைவாகவே வெட்டலாம் அல்லவா. எங்களுக்கு சீரியல் பார்க்கவும், போன் நோண்டவும், பெஸ்புக்கில் லக் எண்ணவும், போடவும் நேரம் இருக்கு. உணவுப்பொருட்களை மிச்சம் பிடிக்க நேரம் இல்லை. நீங்கள் நினைக்கலாம் அந்த நேரத்தில் நாம் வேறு வேலை செய்தால், வீணாக்குவதை விட பத்து மடங்கு வாங்கலாம் என்று, அது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் வீணக்கப்பட்ட பொருள்களுக்குப் பின்னால், தோட்டத்தில் இருந்து உங்கள் கைகளில் வந்து வெட்டி எறியும் வரை, எத்தனை கரங்களின் உழைப்பு மாறி மாறி வந்திருக்கும். அம்மாவுக்கு






நேரம் இருந்தது, அன்று செய்தா என்று நினைக்கும் சேய்களுக்கு... ஒரு செய்தி. இது கதையல்ல பலரது வீடுகளில் அன்று நடந்தது.

திடீர் என இரவு மழை. அம்மா அருகில் இருந்த சாக்கை தலையில் போர்த்துக்கொண்டு வெளி லைட்டைப் போட்டுவிட்டு, பின் முற்றதில் கொத்திய விறகை பொறுக்க, ஓடுகிறா! அப்பா எழுந்து என்னணை இந்த நேரத்தில் என்று சத்தமிட, உங்கை கதவில் . நில்லுங்க தாற விறகை புகைகூட்டு அடுப்படியில் வையுங்கோ என்கிறா. அப்பாவும் வைக்கிறார். காலத்தாலை சமையலுக்கு விறகு ஈரமாக இருந்தால் எரியுமே. மீண்டும் அம்மா படுத்துவிட்டா.

சேவல் கூவுது. அம்மா கிணற்றடியில் சட்டிபானை விளக்கிறா. அப்பா தானும் கூடமாட உதவுகிறார். பின் பிள்ளைகளை எழுப்பி முகம் கழுவி விட்டு வந்து படியுங்கள். நான் தேனீர் ரெடிபண்ணுகிறேன் என்று அம்மா சொல்லிவிட்டு, அடுப்படிக்குள் போக, பிள்ளைகள் எழும்பி விட்டார்களா என்று பாக்க, அப்பா அறைக்குள் ஏதோ தேடுவதுபோல் நடிப்பார். மேசைக்கு தேனிர் வரும். அத்தோடு தேங்காய்




துருவிக் சத்தம் கேட்கும். அப்பாவின் அறைக்குள் எழுத்துவேலை நடக்கும்.

ஒரு அடுப்பில் இடியப்பம் அவிய. மறு அடுப்பில் சொதிகொதிக்க, அம்மிக்கல்லில் மிளகாய் அரைக்க, இடியப்பம் அவித்த அடுப்பில், அரிசிக்கு உலையும் வைக்க, சொதி இறக்கிய கையோடு, நான்கு ஐந்து உருளைக் கிழங்கை கல்லரிக்கும் சட்டியில் தேய்த்து, தேய்த்து, கிழங்கு விணாகாமல் உரித்து, குளம்பு வைக்க. அம்மாவின் சமையல் தடல்புடலாக நடக்கும். இஞ்சாய் ஒருக்கால் வாருங்கோ. இந்த இடியப்பம் நாலு, நாலு கட்டி சம்பலும் போடுங்கோ. தம்பிக்கு மட்டும் கொஞ்ச குளம்பும் விடுங்க. பள்ளிக்கூடம் போகப் பிள்ளையளுக்கு சாப்பாடு ரெடி. சரி பிள்ளைகள் வந்து சாப்பிட்டு விட்டு கெதியா வெளிக்கிடுங்கோ! தனக்கும் அப்பாவுக்கும், சாப்பாடு கட்டியாச்சு. அப்பாவுக்கு சொதி இல்லாட்டி இறங்காது என்று கோர்லிக்ஸ் போத்தலில் சொதியும் விட்டுவைத்துவிட்டு. அம்மா குளிக்க ஓடுகிறா.

பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்வதையும் பஸ் ஏறுவதையும் உறுதிப்படுத்தியபடி அம்மா, சேலைகட்டுவா. அப்பாவும் அதே நேரம் ரெடியாகி விட, இரவு அப்பாவும், அம்மாவும் பாசாலை மாணவர்களது வினாத்தாள்கள் திருத்தியதை மறக்காமல் எடுத்து அம்மா முன்னுக்கு வைப்பா. உடுத்த சேலையோடு ஓடிப்போய் கோழிக்கூட்டையும் திறந்துவிட்டு, ஆட்டுக்கு குழை போதுமோ எனவும், நோட்டமிட்டு பாடசாலைக்கு புறப்படுவா. பின் பாடசாலையில் ஆசிரியர்களான அப்பா அம்மாவுக்கு மீண்டும் அங்கு பிள்ளைகள்.

**சரி இப்ப சொல்லுங்கள், உங்களுக்குத் தான்! நேரம் இல்லையா!!**








# பயத்துடன் பயணிக்கிறது பொழுதுகள்

சர்வதேசரீதியில் பாரிய பிரச்சினைகள் தலையெடுத்துள்ளன.நோய்த் தொற்று, பொருளாதார வீழ்ச்சி, உணவுத் தட்டுப்பாடு, குடும்பப்பிரச்சினைகள், அரசியல் பிரச்சினைகள்

எனப் பல சிக்கல் சூழ் வாழ்வியலுக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறோம். கொரோனா மிகப் பெரும் அச்சுறுத்தலாக இப்போது உருவெடுத்திருக்கிறது. இரண்டாம் உலகப் போருக்கு பின்னரான மிகப் பெரும் சவாலாக இந்நோய்த் தொற்று உருமாறியிருக்கிறது.

இந்நோய்த் தொற்று அரசியல் சமூக பொருளாதார கட்டமைப்பில் குழப்ப நிலைகளை உருவாக்கியுள்ளது

நோய்த் தொற்றுக் காலப்பகுதியில் நோய்ப் பரவலை கட்டுப் படுத்துவதற்

**பிரியா பாலசுப்பிரமணியம்**
(இலங்கை)

காக மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்கள் யாவும் உள்நாட்டு சமூக பொருளாதார நடவடிக்கையில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.

நாட்டைமுடக்குதல், ஊரடங்கு, மட்டுப் படுத்தப்பட்ட பொதுச் சேவைகள், வெளிநாட்டுப் பயணங்களில் தடை,துறை முகங்களை மூடுதல் எனப் பல முடக்கங்களால் மக்கள் முடங்கிப் போனார்கள்.

நோய்த்தொற்றை சமாளிப்பதா, பொருளாதார மாற்றத்தை சமாளிப்பதா, குடும்பப் பிறழ்வை சமாளிப்பதா, மன அழுத்தம் நிறைந்த சூழலுக்குள் எல்லோரும் இருக்கையில் யார் யாருக்கு ஆதரவாக தோள் கொடுக்க முடியும்.

போர்ச்சூழலில் இருந்து மீண்டு மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கையில் அடுத்த பாதிப்பு.திரும்பும் இடமெல்லாம் ஏதோ ஒரு பீதி தொற்றிக் கொள்கிறது.சமையல் எரிவாயு பற்றி சிந்திக்கவே பயமாக இருக்கிறது. செறிமானத்தின் அளவில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினால் பல வெடிப்பு சம்பவங்கள் அரங்கேறுகின்றன.சமையலறைப் பக்கம் போகவே அச்சமாக இருக்கிறது. முன்னர் மக்கள் வெளியில் சுதந்திரமாக நடமாட முடிந்தது. தமது அன்றாட உணவுத் தேவைக்கான தெரிவுகளை நேரில் சென்றே பார்த்து வாங்கிக் கொண்டனர்.ஆனால் தற்போது முற்றிலும் மாறி இணையத்தினூடாக தெரிவு செய்து பெற்றுக் கொள்கின்றனர். இதனால் தரம் விலை பற்றிய அதிருப்திகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

சமூகத்தில் நிகழ்கின்ற நல்லதோ கெட்டதோ எதுவாயினும் ஒன்று கூடி நிகழ்த்த முடியாத நிலை. ஒன்று கூடினால் நோய் தொற்றும் என்ற அபாயம் ஒரு பக்கம். போகா விட்டால் என்ன நினைப்பார்களோ என்ற மனப் போராட்டம் மறு பக்கம். மாணவர்களின் கல்வி நிலையிலும் கற்பித்தலிலும் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.வீட்டிலிருந்தபடியே கற்கின்றனர். இதனால் தொலைபேசியின் பாவனை அவர்களிடையே அதிகமாகியுள்ளது.இணைய வழிக் கல்வியின் நன்மை ஒருபக்கமிருக்க தீமையும் இருக்கிறது.பெற்றோரின் கவனம் பிள்ளைகளில் இருந்து சிதறும் தருணத்தில் அவர்களின் பாதை தடம் மாறுவதற்கான வாய்ப்புகள் மிக அதிகமாக காணப்படுகின்றன.

குடும்பப் பிரச்சினைகள் மிக அதிகமாக இக் காலப்பகுதியில் நிகழ்கின்றன.வீட்டுக்குள்ளேயே நாட்களை கடத்தும் சூழல் அதிகமாக காணப்படுவதனால் குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் மன அழுத்தம் ஏற்பட்டு குடும்ப அமைதி குலைந்து விடக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

அரசியல் மீதான நம்பிக்கையின்மையையும் மக்களின் கருத்துக்களில் இருந்து உணரமுடிகிறது. மக்களால் மக்களுக்கான ஜனநாயக ஆட்சியில் உரிமைகள் மீறப்படுவதும் அநீதிகள் நடந்தேறுவதும் சர்வசாதாரணமாகி விட்டது. கேள்வி கேட்கத் துணிவின்றி பேச்சுச் சுதந்திர மற்று பயத்தோடு வாழ்கின்றனர். இது முடிவல்ல தொடர்.

## குட்டி Story




பொன்னம்பலத்தார் கொடுத்து வைத்த பிறவி. இரண்டு தங்கக்கட்டிகளைப் பெற்று கரைசேர்த்துப் போட்டு மகராசி போய்ச்சேரவும், பொன்னம்பலத்தார் ஓய்வு பெறவும் சரியா இருந்தது. ஐந்து மாதம் சின்னவளோட கனடாவிலும், ஐந்து மாதம் பெரியவளோட அவுஸ்ரேலியாவிலும், இடையில திருவிழாக்காலம் ஊரில் பூர்வீக வீட்டிலும் யாருக்குத்தான் இந்த கொடுப்பினை வரும். சின்னவள் தகப்பனுக்காகக் கடலை வடை சுட்டால், பொன்னம்பலத்தார் சுவைத்துக் கொண்டு 'கொக்காள் ஒரு உழுந்து வடை சுடுவாள் பார், மெதுமெது என்று அப்படியே கொம்மாண்ட கைப்பக்குவம்', என்பார் -சின்னவள் முகம் சுருங்கும். பெரியவள் உழுந்து வடை சுட்டால், 'சின்னவள் கொம்மாண்ட பக்குவத்தில ஒரு கடலை வடை சுடுவாள் பார், மொறுமொறு ம்ம்ம்', என்று பெருமூச்சுவிடுவார் - பெரியவள் 'அப்பாக்கு எப்பவும் சின்னவளிலதான் விருப்பம்', என்று பெரியவள் மனம் கருகும். தன் வெளிநாட்டு நண்பனிடம், 'என்ன தான் வெளிநாட்டில் ஏசி போட்டாலும் ஊரில இருக்கிற சில்லென்ற காற்று இங்க கிடைக்குமோ', என்று புலம்புவார். சரி இப்ப பொன்னம்பலத்தார் ஊருக்குப் போறார், ஊரில அவர் என்னதான் சொல்வார்?!




தமிழினி பாலசுந்தரி
(நியூஸ்லாந்து)

ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt
R.Ragunathan
Email: mediajara@gmail.com
Handy: 01520 900 90 30
Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலங்கை, இந்திய பலசரக்குப் பொருட்கள், மரக்கறி வகைகள், கடல் உணவுவகைகள் அனைத்திற்கும் எம்மை நாடுங்கள்.
TEMPO Ria MoneyGram
துரித பணமாற்றுச் சேவை
Hückelhoven



# எங்கு பார்த்தாலும் மின்காந்த அலைகள்!!!




நம்மைச் சுற்றி எவ்வளவோ நடைபெறுகின்றது. சில விஷயங்கள் நமது கண்களுக்குத் தெரிந்தும் நமது வாழ்க்கைக்கு உபயோகமானவை இல்லை, ஆனால் வேறு சில விஷயங்கள் நமது கண்களுக்குத் தெரியாமலே நமது அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் உபயோகமாக இருக்கின்றன. அப்படி ஒன்றானது தான் electronmagnetic waves என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் மின்காந்த அலைகளும் கூட. இந்த மின்காந்த அலைகள் நம்மைச் சுற்றி எப்போதுமே இருக்கின்றன. உண்மை சொல்லப் போனால், இந்த அலைகள் இல்லாமல் நமது இன்றைய நவீன உலகமும், வாழ்க்கையும் இருக்க முடியாது. இவ்வாறு முக்கிய இந்த அலைகள் பற்றி சில சுவாரசியமான விஷயங்களை அறியப் போகின்றீர்களா?

வானொலிப்பெட்டி, செல்லிடத் தொலைபேசி (Mobile Phone) WiFi, புவியிடங்காட்டி (GPS Navigation) போன்ற பலவற்றை இந்த மின்காந்த அலைகள் இல்லாமல் செயல்படாது. இந்த மின்காந்த அலைகளின் wave-length என்று கூறப்படும் அலை நீளம் பொறுத்து, இவை வெவ்வேறு வகையாகப் பிரிக்கப் படுகின்றன. அந்த வகைகளில் ஒன்று தான் ஒளி [light]. ஒளியைத் தவிர்த்து மேலும் வானொலி அலைகள் [radio waves], நுண்ணலைகள் (micro waves) , அகச்சிவப்புக் கதிர்கள் (infrared waves) புற ஊதா கதிர்கள் (ultraviolet waves) ஊடு கதிர் அலைகள் (x-ray) மேலும் காம்மா அலைகள் (gamma waves) என்கிற வகைகள் காணப் படுகின்றன. நமது நவீன உலகில் இந்த அனைத்து வகையான மின்காந்த அலைகளும் ஒவ்வொரு விதமாக உபயோகிக்கப்படுகின்றன. இதற்கு சில உதாரணங்களைத் தருகிறேன்.

வானொலி அலைகள் இருப்பதால் தான் வானொலிப் பெட்டியில் தினமும் பாடல்களைக் கேட்க முடிகின்றது. நுண்ணலைகளின் உதவியுடன் செல்லிடத் தொலைபேசியூடாக தூரத்தில் இருக்கும் நண்பனுடன் பேச முடிகின்றது. அகச்சிவப்புக் கதிர்கள் இருப்பதால் தொலைக் கட்டுப்படுத்தியின் (remote control) உதவியுடன் தொலைக் காட்சிப் பெட்டியில் சேனல்களை மாற்ற முடிகின்றது. புற ஊதா கதிர்கள் மருத்துவத்தில் சில பாக்டீரியாக்களைக் கொல்ல உபயோகிக்கப் படுகின்றது. ஊடு கதிர் அலைகள் உங்களுக்கு நன்றாகவே தெரியும். டாக்டரிடம் சென்று எக்ஸ் ரேய் (X-Ray) படம் எடுப்பதற்கு ஊடு கதிர் அலைகள் தேவைப்படுகின்றன. மற்றும் காம்மா அலைகளும் மருத்துவத்தில் சில விதமான புற்றுநோயைக் குணப்படுத்த உதவுகின்றது.



**Dr.நரோஷன் தில்லைநாதன்**
(யேர்மனி)

மின்காந்த அலைகளில் உள்ள விசேஷம் என்ன தெரியுமா? இந்த அலைகள் ஒரு பொருளில் படும் போது, அதன் அலைநீளம் பொறுத்து ஏற்படும் விளைவு மூன்று விதமாக இருக்கக் கூடும். ஒன்று அந்த அலை அந்தப் பொருளில் பட்டுத் தெறிக்கின்றது, இல்லை என்றால் அந்தப் பொருளை ஊடுருவிச் செல்கின்றது அல்லது அவ்வலை உறிஞ்சி எடுக்கப் படுகின்றது. இந்தக் காரணத்தால் தான் உதாரணத்திற்கு ஒளி ஒரு வீட்டுச் சுவரில் பட்டுத் தெறிக்கின்றது, ஆனால் வானொலி அலைகள் அந்தச் சுவரை ஊடுருவிச் செல்கின்றன. அப்படி ஊடுருவிச் செல்வதால் தான் வீட்டுக் கதவும், ஜன்னல்களும் மூடி இருந்தும், நம்மால் வானொலிப் பெட்டியில் பாடல்களைக் கேட்க முடிகின்றது. மேலும் இதே காரணத்தால் தான் நாம் வீட்டில் ஒரு அறைக்குள் இருந்தும் செல்லிடத் தொலைபேசியில் பேச முடிகின்றது.

சரி, கடைசியாக மின்காந்த அலைகள் பற்றி இன்னும் ஒரு சுவாரசியமான விஷயம் ஒன்றைக் கூறுகின்றேன். 100 வருடங்களுக்கு முன்பு வானொலிப் பெட்டி கண்டுபிடித்து உபயோகித்த போது அனுப்பப் பட்ட வானொலி அலைகள் இன்று கூட விண்வெளியில் பறந்து செல்கின்றன. இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா, நண்பர்களே? விண்வெளியில் ஏதாவது வேற்றுலக உயிரிகள் (aliens) உள்ளன என்று எடுத்துக்கொள்வோம். அந்த உயிரிகள் நமது பூமியிலிருந்து அனுப்பப்பட்ட அந்த வானொலி அலைகளை தமது வானொலிப் பெட்டியில் பெற்றுக்கொண்டால், அதில் 100 வருடங்களுக்கு முன்பு புவியில் ஒலித்த பாடலை தான் கேட்பார்கள்.

நண்பர்களே, நமது கண்களுக்குத் தெரியாத இந்த மின்காந்த அலைகள் நமது நவீன வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியம் என்பதைப் பார்க்க ஆச்சரியமாகவும், சுவாரசியமாகவும் இல்லையா? இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக அறியத் தாருங்கள்!







நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2021 ஆண்டுக்கான புத்தம் புது டிசைன்கள், கலைநயம் மிளிரும் தரமான தங்க நகைகள் எம் கையிருப்பில்.



பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்

திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49
69329 Frankfurt Main




Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425



# பதட்டங்களைப் பணமாக்க......



பொலிகையூர் ரேகா
(இலங்கை)

இன்று அலுவலகம் ஒன்றிற்குப் பணம் கட்ட வேண்டிய தேவை ஒன்றின் காரணமாக முன்னரே பணத்தை எடுத்து வைத்திருந்தேன். வேறு சில இடங்களில் பணமாகக் கொண்டு வர வேண்டுமெனக் கூறியிருந்ததால் இங்கும் தேவையற்ற சிரமம் வேண்டாமெனப் பணம் செலுத்தும் அட்டையைத் தவிர்த்துப் பணமாக எடுத்து வைத்திருந்தேன்.

எடுத்துச் சென்ற தொகை தவிரக் கூடுதலாகக் கட்ட வேண்டி இருந்ததால் மொத்தமாக வைத்திருந்த பணத்தையும் கூடுதலாகக் கட்ட வேண்டிய பணத்தைத் தனியாகவும் கொடுத்திருந்தேன்.

காசுப் பொறுப்பாளராக இருந்தவர் தனியாகக் கொடுத்த 5000 ரூபாய் தாளை எண்ணுவதற்குச் சேர்த்துக் கொள்ளாமல் தனியே கீழே தள்ளிவிட்டு மீதிப் பணத்தை எண்ணித் தொகை குறைகிறது என்று என்னிடமே கொடுத்தார். கொடுத்துவிட்டேன் என்று கூறியதை ஏற்காமல் மீண்டும் தருமாறு கூறினார்.

அவர் கேட்டதற்காக நான் வைத்திருந்த பணத்தாளை என் கைப்பையினுள் மீண்டும் சரிபார்த்துவிட்டு சரியாக எண்ணி வைத்த தொகையோடு மேலதிக பணத்தாளைக் கொடுத்ததால் தெளிவாக அவரிடம் கூறினேன். 3 தாள்களில் 2 தாள்கள் மட்டுமே கையிலிருப்பதைக் காட்டி அவரிடம் பணம் கொடுத்துவிட்டதை உறுதிப்படுத்தினேன். சிறு முகமாற்றத்தோடு சில மணித் துளிகள் தேடுவது போல் பாசாங்கு செய்துவிட்டு கீழிருந்து எடுத்து இங்கே விழுந்திருக்கிறது என்றார். (கீழே விழுமளவிற்கு அவர் வேறு வேலையின் பின் பணத்தை எண்ணவில்லை. வாங்கிய கையோடு எண்ணத் தொடங்கியிருந்தார்.நான் கைப்பையை மூடிவிட்டுக் கையிலிருந்த கோப்பை எடுப்பதற்குள் நடந்திருக்கிறது.)

கூட்டம் அதிகமில்லாத நேரத்தில் கொடுக்கப்பட்ட பணத் தாளை இல்லை என்று சாதித்துக்கொண்டிருந்த ஒருவரிடம் அது தவறுதலாக நடந்திருப்பதற்கான வாய்ப்பில்லை என்பதையும், தனியே கொடுக்கப்பட்ட ஒற்றைப் பணத்தாள் குறித்துப் பதட்டத்தில் நானே மறந்து மீண்டும் கொடுத்திருப்பேன் என மீளப் பெற நினைத்தமை குறித்த அவர் திறமையையும் புன்னகையோடு கடந்து வந்திருந்தேன்.

அவர் இப்படிக் கல்லெறிந்து பார்த்ததற்கு ஒரு காரணம் நான் அங்கே சென்றபோது அந்த அலுவலக நடைமுறை குறித்தும் பணம் எப்போது கட்ட வேண்டும் என்பது குறித்தும் கேட்டிருந்தேன். அந்தக் கேள்விகள் நான் ஒன்றும் தெரியாமல் வந்திருக்கிறேன் என்பதாகவோ,எளிதில் ஏமாற்ற முடியும் என்றோ அவருக்குத் தோன்றியிருக்க வேண்டும்.ஏமாற்ற நினைத்து ஏமாந்திருந்தார்.

இங்கே சொல்ல வருவதெல்லாம் ஒன்றுதான். உங்கள் பதட்டத்தைப் பணமாக்கப் பலர் காத்திருக்கின்றனர். இவை இங்கே நடந்த ஒரு சம்பவத்தனடிப்படையில் நான் சொல்லவில்லை.நான் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு சம்பவங்களில் இதைப் புரிந்துகொண்டிருக்கிறேன்.

அவர்கள் நம் பதட்டத்தின் மீது பணம் பார்க்கிறார்கள் என்பது புரிந்து அது குறித்து நாம் கேள்வி கேட்டால் எதிரியாகிவிடுவோம்.இல்லாதவற்றைக் கூட அதிகப்படியாக உருவாக்கி நம்மைத் தவறென்று கூறுவார்கள்.அவர்கள் பிழையென்பதை மறைத்தாக வேண்டுமே. ( எங்கும் தவறுகளைக் கேள்வி கேட்பது அதை உரியவர்களுக்குப் பிடிக்காததுதான்)

அதே இடத்தில் வேறு யாரேனும் ஒருவர் அந்த அலுவலகச் சூழலில் மொழியோ,அங்கேயுள்ள நடைமுறைகளோ தெரியாதவராக இருந்திருந்தால் பதட்டத்தில் மீண்டும்அந்தப் பணத்தாளைக் கொடுத்திருப்பார்.

இது இங்கு மட்டுமல்ல. பணம் கையாளப்படும் இடங்களில் அதுவும் கொடுப்பவருக்கும் பெறுபவருக்கும் இடையே திரை, அலுவலக அமைப்புகள் காணப்படும் இடத்தில் தவறுதலாக ஒரு பெரிய தொகைத் தாளைக் கீழே விழுத்திவிட்டு நாம் கொடுக்காதது போலக் கூறி நம்மையே எண்ணிப் பார்க்கச் சொல்லிவிட்டுத் தொகை குறைவாக இருப்பதை நம் வாயாலேயே ஒத்துக்கொள்ள வைத்துப் பணத்தைப் பெற்றுக் கொண்டு நாம் சென்றபின்பு கீழே வேண்டுமெனத் தவறவிட்ட பணத்தை எடுத்துக்கொள்வது நடைபெறுகிறது.

வேறிடங்களிலும் அவர்கள் சூழலுக்கேற்ப இந்தப் பண எடுப்பு நடத்தப்படுகிறது.தெருவோரக் கடை ஒன்றிலும் இவ்வாறாக நடந்தமை குறித்து இன்னொருவரின் பட்டறிவைக் கேட்டிருக்கிறேன். பெருந்தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டிய இடத்தில், விவரம் தெரியாமல் செல்லும் இடங்களிலும் கவனமாக இருங்கள். இங்கே நாம் ஏமாறத் தயராக இல்லாவிட்டாலும் நம்மை ஏமாற்றுவதற்கெனப் பலர் காத்திருக்கின்றனர்.

பி.குறிப்பு– உண்மையிலேயே சரியான தொகையைக் கொடுக்காமல் விட்டுவிட்டு அலுவலகங்களில் யாரேனும் முரண்பட்டிருந்தால் அந்தப் பட்டறிவு வாய்க்கப் பெற்றவர்கள் இங்கிருந்தால் நான் பொறுப்பல்ல.

---

12 ஆம் பக்கத் தொடர்ச்சி...




இதில் ஏதாவது தவறு வந்து விடுமோ என்று கூடல் இழைத்துப் பார்க்க அஞ்சுகின்ற பெண்களும் உண்டு. இதேபோல் காதலியை அடைவதற்காக வட்டக்கல்லைத் தூக்குவதும், ஏறு தழுவுதலும். வரைபாய்தலும், மடல்மா ஏறதலும் போன்ற சம்பவங்களை இலக்கியக் காதல் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது. தமது காதலில் வெற்றி கிடைப்பதற்காக தமது கொள்கையை விட்டுவிடாது கடைப்பிடித்து காதலர்கள் வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

ஆனால், இன்று நட்பும், காதலும், கணவன் மனைவி உறவும், பெற்றோர் பிள்ளைகள் உறவும் என்று அனைத்தும் கேள்விக்குறியாக காணப்படுகின்றன. உண்மைக் காதல் நினைத்து ஏங்குவதில் தொடர்கிறது. திருமணமான காதல் பிரிவை எதிர் நோக்கிக் காத்திருக்கின்றது. இருப்பினும் காதலுக்கு முடிவில்லை. காலம் உள்ளவரை தொடரும்.





# குழந்தை கறுப்பா? சிவப்பா? குங்குமப்பூ தீர்மானிக்குமா?

புலம் பெயர்ந்த கர்பவதிப் பெண்கள் என்ன செய்கிறார்களோ தெரியாது ஆனால் ஊரில் இருக்கும் போது மகள் கர்ப்வதியானால் தாய் குங்குமப்பூ கொடுத்தே தான் தீருவர். அப்போது தான் பிறக்கிற பிள்ளை நல்ல சிகப்பு நிறமுடையதாய்ப் பிறக்கும் என்ற நம்பிக்கை. இதில் ஏதாவது உண்மை இருக்குமோதெரியாது.

பாட்டி கூறிய தத்துவம் இப்போ 75 ஆண்டு களின் பின்னர் விஞ்ஞானிகளின் அங்கீகாரம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. பாட்டியின்




அனுபவ விஞ்ஞானம் இன்றைய அறிவியல் விஞ்ஞானமாகிறதைக் காண மகிழ்ச்சியாகஉள்ளது.

சில வருடங்களுக்கு முன் வெளியான இரண்டு ஆய்வறிக்கைளின் படிக்கு தாயினது கருப்பையில் சிசு விருத்தியுறுகின்ற சமயத்திலே பெற்றோர்களின் உணவு முறைகள் சிசுவின் விருத்தியினைப் பாதிப்பதால் அதன் ஆயுட் காலம் முழுவதுமே குறிப்பிட சில நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன என்கிறார்கள் ஆய்வாளர்கள். கொஞ்சம் விளக்கம் தேவைப்படுகிறதுஅல்லவா? இதோ! நாம் ஒவ்வொருவரும் இந்த உலகிலே அவதரிப்பதற்கு நமது தாய்தந்தையர்தான் காரணம் என்பதை எத்தனைமுறைதான் சொல்வதாம் ஆகவே அதை விடுங்கள். ஆனால் எம்மில் பிறக்கும் பொழுதோ பின்னர் வளரும் பொழுதோ காணப்படுகின்ற இயல்புகளுக்கும் அந்த இருவரிடமும் நாம் உபகாரமாகப் பெற்ற பரம்பரை அலகுகளே காரணம் எனலாம். இதனையே [பரம்பரைவளர்ப்பியல்] என்கிறார்கள்.ஆனால் நாம்வளர்கின்ற பொழுது எமது சமூகச் சூழல் எமது இயல்புகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தவே செய்கின்றது.

அது நண்பர்கள் மூலமாகஏற்படலாம், பெற்றோர்கள் சுற்றத்தின் மூலம்ஏற்படலாம் வேறுபல சமூகச் சூழல் காரணிகளாலும் ஏற்படலாம். இதனை Eugenics [சூழல் வளரப்பியல்]என்பார்கள் ஆகவே நமது ஆளுமையைத் தீர்மானிப்பது Eugenics மற்றும் Euthenics ஆகிய இரண்டினதும் கூட்டே. ஆனால் இது காலம் வரை அத்தனை கவனத்தில் இல்லாமல் இருந்து வந்துள்ளது இன்னொரு கூறு.

அதனை Epigenetics [மேல்சூழல் வளரப்பியல்] என்பார்கள். கருப்பையிலே சிசு விருத்தியுறுகின்ற போது அதற்குக் கிடைக்கின்ற சூழல் அதன் பரம்பரை அமைபினில் மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்பதை இதனால் அறிய



**அமரர்.கனக்ஸ்**
(முன்னாள் அதிபர் மகாஜனாக்கல்லூரி தெல்லிப்பழை)

முடிகிறது. ஆகவே கரப்பவதிப் பெண் ஒருவர் குங்குமப்பூ உட்கொள்வதால் குழந்தையின் தோல் நிறத்தில் மாற்றம் ஏற்பட வாயப்பு உண்டு.

மனிதருடைய தோலின் நிறத்தினைப் பார்ப்போ மாயின் வெறுமனே ஒரு முனையில் கறுப்பும் மறு முனையில் வெள்ளையையும் வைத்தால், இவை இரண்டுக்குமிடையே எத்தனை எத்தனை நிறங்களைக் காண்கிறோம். தந்தையின் விந்து கொண்டுவரும் நிறத்திற்கான பரம்பரை அலகும் தாயினது சூல் வைத்திருக்கும் நிற்திற்கான பரம்பரை அலகும் பிள்ளை கறுப்பா, வெள்ளையா என்பதை தீர்மானிக்கின்றன.

அப்படியாயின் இந்தனை நிறபேதங்கள் எப்படித் தோன்றுகின்றன. தாய் தந் தயிடமிருந்து வருகின்ற நிறத்தினைத் தீர்மானிக்கும் பரம்பரை அலகுகளை பிரதான பரமபரை அலகுகள் ( Major Genes) என்கிறோம் ஆனால் முட்டையினது குழியவுருவிவே நிறத்துடன் சம்பந்தப்பட்ட பல் குழியவுரு பரம்பரை அலகுக Polygenes உள்ளன. இவையே கறுப்புக்கும் வெள்ளைக்கு மிடையான நிற பேதங்களுக்குக் காரணமாகின்றன. ஆகவே உட்கொள்ளுகின்ற குங்குமப்பூ குழியவுருப் பரம்பரை அலகுகளில் மாற்றங்களை செய்யலாம். ஆய்வாளர்கள் தான் அதனைக் கண்டு பிடிப்பார்கள்.



காதலர் தின வாழ்த்துக்கள் | Happy valentine's Day Feb.14

# நரை வரும் பருவம்



கொஞ்சக் காலத்திற்கு முன்னர், இடது கண் இமையில் ஒரு நீட்டு வெள்ளை மயிர் எட்டிப் பார்க்கத் தொடங்கியது. ஒரு நாள் காலம் பற வெள்ளன ளாயளந எடுத்திட்டு, மூக்குக் கண்ணாடியை போட்டுக் கொண்டு முகக் கண்ணாடியை பார்க்க, “Hello.. how are you” சொல்லிக் கொண்டு அந்த ஒற்றை நரை மயிர் கண்ணிமையில் அரியாசனம் போட்டு அமர்ந்திருந்தது.

ஆண்டவரை கூப்பிட்டு மனதுக்குள் அழுதுவிட்டு, பெடியளை காரில் ஏற்றிக் கொண்டு பள்ளிக்கூடத்திற்கு போகும் வழியில், கண்ணிமையில் துளிர்விட்ட ஒற்றை நரை மயிரின் சோகத்தை அவங்களிடம் பகிர, பக்கத்து சீட்டில் இருந்த சந்தோஷ், காதடியில், பிடறியில் என்று தடவி பார்த்து விட்டு அப்பா.. you got grey hair in your head too” என்று ஆட்டிலெறியால் அடித்து மனதை நோகடித்தான். தலையும் நரைக்க தொடங்கி விட்டது, ஐயகோ என்று மனது அழத் தொட்கியது. யாழ்ப்பாணத்தில் எங்களோடு வாழ்ந்த அம்மப்பாவை பழசு என்று சின்ன வயதில் பகிடியாக கூப்பிட்டது அப்போது ஞாபகம் வந்தது. அப்படியென்றால் நானும் இன்னும் கொஞ்ச நாளில் பழசு ஆகிவிடுவேனா, இப்பத் தானே பரி யோவானில் பத்தாம் வகுப்பில் படித்து விட்டு வந்த மாதிரி இருக்கிறது , அதற்குள் நானெப்படி பழசாக முடியும், இது கொடுமை என்று மனது அரற்றியது.



ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)

பெடியளை பள்ளியில் இறக்கி விட்டு விட்டு, Signal lights ல் கார் நிற்க, காரிலிருந்த முகக் கண்ணாடியை இறக்கி விட்டு மீண்டும் அந்த கண்ணிமை ஒற்றை நரையை கவலையோடு பார்த்துக் கொண்டிருக்க, மனிசியிடமிருந்து வரும் வழமையான காலை நேர தொலைபேசி அழைப்பு காரை உலுக்கியது. என்ர கண்ணிமையில் ஒரு நரச்ச மயிர் வந்திட்டு அனுதாபத்தை எதிர்பார்த்து கவலையை பகிர, உமக்கு நீர் இன்னும் பெடியன் என்று நினைப்போ மறுமுனையில் நக்கல் தொனித்தது. மௌனத்தையே விடையாக பகிர, இன்னும் school Boys மாதிரி friends ஓட சேர்ந்து வயசு போனது தெரியாமல், கூத்தடிக்க நாடு நாடா trip போய்க் கொண்டிரும். மனிசியின் அன்றைய நற்செய்தி தொடங்கியது.

மனிசியோட கதைத்துக் கொண்டே. இந்த நரைச்ச மயிரை பிடுங்கட்டோ.. அந்த கண்ணிமையின் ஒற்றை நரை மயிரை நகங்களைக் கொண்டு சுற்றி வளைக்க முயற்சி செய்து கொண்டிருக்க, பின்னால் இருந்த கார்காரன் horn அடித்து, signal lights ல் green light விழுந்ததை சுட்டிக் காட்டவும் சரியாக இருந்து.

‘‘பிடுங்காதேயும்..பிடுங்கினால் இன்னும் கனக்க வரும்..உதை விட்டு போட்டு.. பின்னேரம் வரும் போது மறக்காமல் பாலும் பாணும் வாங்கி யாரும்.. மறக்காதேயும்.. உமக்கு வயசு போய்ட்டுது.. ஹா ஹா ஹா’’ மறுமுனையில் மனிசி மகிழ்ச்சியாக விடைபெற்றாள். ‘‘பிடுங்கி தான் பார்ப்பமா.. அவா வேணுமென்டு சொல்லுறாவோ’’ என்று மனம் ஒரு புறம் மனிசையை சந்தேகித்தது. வேலைக்கு வந்ததும், முதல் வேலையாக Googlel கேட்டால், அதுவும் மனிசி சொன்னது சரிதான் என்று சொல்லுது, ஒன்றை பிடுங்கினால் ஒம்பது முளைக்குமாம்.

ஊரில் வருடந்தோறும் நடக்கும் சம்சாரிகள் VS இளந்தாரிகள் கிரிக்கெட் ஆட்டத்தில், அப்பா சம்சாரிகள் அணிக்கு விளையாடும் போது அவருக்கும் நாற்பது சொச்ச வயசு தானிருந்திருக்கும். சம்சாரிகள் அணியை பழசுகள் Team என்று இளந்தாரி அண்ணாமார் நக்லடிக்கும் போது சிரித்ததும் ஏனோ இப்ப தான் நினைவில் வருகிறது.



பதினாறே பதினாறு வயதில் யாழ்ப்பாணம் வெலிங்டன் திரையிரங்கில் பார்த்த வருஷம் 16 படத்தோடு, குஷ்பூ கனவுக் கன்னியானாள். குஷ்பூவிற்கு வயதாகி சினிமாவை விட்டு விட்டு அரசியலில் நடிக்கத் தொடங்க, நாங்களும் நயன்தாராவின் கட்சியில் இணைந்தோம். நயன்தாராவின் கட்சியில் இணைந்தாலும், குஷ்பூவை என்றுமே மறக்க முடியவில்லை.

எங்களிற்கு வயது போவதை மறக்கவும் மறைக்கவும், நாங்கள் இளமையான நடிகைகளை பின் தொடர்ந்தாலும், வயது எங்களையும் அவளவையையும் கலைத்துக் கொண்டு தான் வருகிறது. எங்களைப் போல் குஷ்பூவிற்கும் தலைமயிர் நரைத்திருக்கும் என்று நினைக்க கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. நாளைக்கு நயன்தாராவிற்கும் தலைமயிர் நரைக்கும் என்று நினைக்க ஒரு நமுட்டுச் சிரிப்பு இதழோரத்தில் எட்டிப் பார்த்தது.

அலுவலகத்தில் கோப்பி போட போனால், Office குசினியில் இருக்கும் கண்ணாடியிலும் இடக் கண் இமையில் நரைத்த மயிர் தெரியுது. என்ன இழவிற்கு எல்லா இடமும் கண்ணாடி வைக்கிறாங்களோ என்று பொருமிவிட்டு, Phone ஐ எடுத்து முகத்தை ஒரு selfie எடுத்து, ஒற்றை நரையரின் தாக்கத்தை ஆராயத் தொடங்கினேன். இப்பக் கொஞ்ச காலமாக ஒவ்வொரு நாள் காலம் பறயும் பல் மினுக்கி, shave எடுத்து விட்டு, மூக்கு கண்ணாடியை மாட்டினால், முகக் கண்ணாடியை ஆக்கிரமிப்பது, இடது கண்ணிமையில் கோலோச்சும் அந்த ஒற்றை நரைமயிர் தான். ஒற்றை நரையரை பிடுங்கவா.. விடவா என்று விவாதத்தை மனம் ஒரு பக்கம் நடாத்திக் கொண்டிருக்க, தலையில் கொஞ்சம் கொஞ்சமாக நரைமயிர்கள், முல்லைத்தீவில் அரங்கேறும் சிங்களக் குடியேற்றங்களைப் போல், ஊடுருவத் தொடங்கிவிட்டன.

26 ஆம் பக்கம் பார்க்க...







கவிதா லட்சுமி
(நேர்வே)

# பெண்மை விலங்கு

என்னிடம் பெண்மையில்லை
மன்னித்துவிடுங்கள்!

வளையல் குலுங்க
கொழுசொலியுடன் வளையவரும்
பெண்மை

காலை முழுகி குங்குமத்துடன்
கணவனை தட்டியெழுப்பும்
பெண்மை

நாற்சுவரில் தூசிதட்டி
நல்ல பெயர்வாங்க
முடியவில்லை என்னால்

கண்முடி நின்று
கணவனுக்கும்
குழந்தைக்குமாய் மட்டும்
பிரார்திக்க விருப்பமில்லை எனக்கு
அதற்கும் மேலும் சிந்திக்க இருக்கிறது

சமுகத்தின் வக்கிர வார்த்தைகளை
வெல்ல
மொழியும் வழியும்
புரிந்து போனதில்
மௌணித்திருக்க மறுக்கிறது
அது தாயோ
என்னை தனதாக்கிக் கொண்டவனோ

தொங்கப்போடும் தாலியில்
எனது கண்ணியத்தையும்
பெண்மையையும் நிரூபிக்க
இஸ்டமில்லை

நிமிர்ந்தே நடக்கிறேன்.
எந்த ஆணிடமும்
சிரித்து பேச முடிகிறது என்னால்
அவர்களையும்
சகமனிதர்களாகத்தான்
பார்க்க முடிகிறது.
மன்னித்து விடுங்கள்.

தாய்மை என்ற பாத்திரத்தில்
விழுவதில் பலதும்
எதிர்பாலின்
சோம்பேறித்தனமும்
சொற்பத்தனமும் என்பது
தெரிந்த பின்
எழுதுகிறேன்.

பலரின் சுகவாழ்விற்காய்
எமக்கு அளித்த கௌரவம்
தாய்மை

வெட்கத்தின் வரைமுறை
தெரியவில்லை எனக்கு
அடக்கம் என்பதன் பொருள்
வித்தியாசமாயிருக்கிறது
எனது அகராதியில்

பொறுமை என்பதன்
அளவுகோல்
அவர்களதும் எனதும்
ஒரே அளவில் இல்லை

மரபுகளை முறித்துக்கொண்டு
மனிதனாக இருக்கச் சொல்கிறது
எனது சுயம்


நீங்கள் நினைக்கும் பெண்மை
என்னிடம் இல்லை.
மன்னித்துவிடுங்கள்!

---

## கடுகுமணி:

# இரவுச் சாப்பாடு வருகின்றது

ஆபிரக்கக் கண்டத்திலே பல்வகை மக்கள் வாழ்கிறார்கள். மனிதரைச் சாப்பிடுபவர்களும் வழ்ந்துள்ளனர்.அங்கு பெருந்தொகை மொழிகளும் பேசப்படுகின்றன. அம் மொழிகளின் பண்புகளும் அவை பேசப்படும் முறைகளும் மொழியியலாளர்களுக்கு வியப்பளிப்பானவையாகவும் உள்ளன.



பேராசிரியர்
**அ.சன்முகதாஸ்**
(வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்)

நாம் ‘அ’என்று ஒலிக்கும்போது நெஞ்சிலிருந்து வரும் காற்றினை வெளியே தள்ளுகிறோம். ஆனால் ஆபிரிக்காவில் சில மொழிகளில் ‘அ’ என்பதனை ஒலிக்கும்போது காற்றினை உள்ளே இழுக்கின்றார்கள். ஒரு தடவை ஒலித்துப் பாருங்கள். அவ்வளவு எளிதானதல்ல என்பதை நீங்களே உணர்வீர்கள்.

முழவிலே ஒலித்துப் பேசுகின்ற மொழி வழக்கும் ஆபிரிக்காவிலே உண்டு. இத்தகைய வியப்பான பண்புகளையுடைய மொழிகளை ஆராய்வதற்காக 18ஆம், 19ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளிலே பல மொழியியல் ஆய்வாளர்கள் அங்கு சென்றனர். முன்னர் ஒரு தடவை ஓர் ஆய்வாளர் ஆபிரிக்காவில் ஓர் ஊரிலே சென்று அங்குள்ள மொழிபற்றிய ஆய்வுத் தரவுகளைப் பெற்றுக் கொண்டு அன்று இரவு அடுத்த ஊரிலே தங்கி அடுத்த நாள் மொழியாய்வு செய்வதற்காக ஒரு வழிகாட்டியுடன் மாலை நேரம் புறப்பட்டுச் சென்றாராம். அவர் ஊரைக் கடக்கின்ற வேளையிலே அவர் நின்று புறப்பட்ட ஊரிலிருந்து முழவொலி கேட்டது. உடனே மொழியாய வாளர் தன்னுடைய வழிகாட்டியிடம் அந்த முழவொலி பற்றிக் கேட்டார்.

அதற்கு அந்த வழிகாட்டி ‘நீங்கள் நின்ற ஊரவர்கள் நீங்கள் செல்லும் அடுத்த ஊரவர்களுக்குத் தகவல் அனுப்புகிறார்கள்’ என்றான். ‘என்ன தகவல் அனுப்புகிறார்கள்?’ என்று கேட்டார் ஆய்வாளர். ‘அடுத்த ஊரவர்களுக்கு, உங்களுடைய இரவுச் சாப்பாடு வருகிறது என்னும் தகவலை அனுப்புகிறார்கள்’ என்றான் வழிகாட்டி. அடுத்த ஊரில் உள்ளவர்கள் மனிதரை உண்பவர்கள் என்பது மொழி ஆய்வாளருக்குத் தெரியாது.



# ஜனாதிபதி அரசியல் தீர்வு பேச்சுக்கு அழைப்பு விடுப்பார் என்ற எதிர்பார்ப்பு பொய்த்தது!



## த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் எம்.பி

'அரசியல் தீர்வுக்கான பேச்சு வார்தை நடத்த தான் தயார்' என்ற ஒரு நிலைப்பாட்டை ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச இன்று தன் கொள்கை உரையில் அறிவிப்பார் என்று கடந்த சில நாட்களாக ஒருசில ஆங்கில, தமிழ், சிங்கள ஊடகங்களிலும், ஒருசில தமிழ் அரசியல் தரப்புகளாலும் வெளியிடப்பட்ட ஊகங்கள் இன்று பொய்த்தன.

ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச அடுத்த மூன்று வருடங்களுக்கான தனது அரசாங்கத்தின் கொள்கை நோக்கை விளக்கி இன்று பாராளுமன்றத்தில் ஆற்றிய நீண்ட உரையில், தேசிய இனப்பிரச்சினையை,பொருளாதார பிரச்சினையாக மட்டுமே பார்க்கும் தனது கொள்கை மாறவில்லை என்பதை தெளிவாக கோடிட்டு காட்டினார்.

ஜனாதிபதியின் உரை நிறைவு பெற்ற பின், முன்னாள் எதிர்கட்சி தலைவரும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் எம்பி மிகவும் சலிப்புடனும், ஏமாற்றத்துடனும் இருந்ததை, அவருக்கு சமீபத்தில் அமர்ந்திருந்த நான் அவருடன் சற்று உரையாடிய போது அவதானித்தேன். அது எனக்கு மிகுந்த மனக்கவலையை தந்தது.

ஜனாதிபதி இனப்பிரச்சினையை பற்றி ஒரு வார்த்தையும் கூறாமல், கடலுக்கு அடியில் அமைக்க திட்டமிடும் டிஜிடல் தொழில்நுட்ப கேபிள்களை பற்றி அதிகம் பேசினார். உங்கள் இனப்பிரச்சினையையும் அங்கே கடலுக்கு அடியில் புதைக்க போகிறாரோ என அவ்வேளை என்னுடன் உரையாடிய முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேலியாக தெரிவித்தார், என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.



இன்று பாராளுமன்றத்தில் இடம் பெற்ற ஜனாதிபதியின் சிம்மாசன உரையை அடுத்து கருத்து கூறிய மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது, 'அரசியல் தீர்வுக்கான பேச்சு வார்தை நடத்த தான் தயார்' என்ற ஒரு நிலைப்பாட்டை ஜனாதிபதி இன்று தன் கொள்கை உரையில் அறிவிப்பார் என்று கடந்த சில நாட்களாக வெளியிடப்பட்ட ஊகங்கள் பொய்த்தன. கொழும்பின் ராஜதந்திர சமூகம் தவறாமல் வாசிக்கும் பிரபல வார இறுதி ஆங்கில பத்திரிக்கையின் அரசியல் ஆரூடம் பொய்த்தது.



அப்பத்திரிக்கை தனது ஏற்புடைமையை இழந்தது என்றும், அதை நம்பிய ஒருசில தமிழ் அரசியல்வாதிகளும் ஏமாந்தனர் என்றும், சற்று முன் என்னுடன் உரையாடிய பிரபல மேற்கு நாட்டு ராஜதந்திரி சொன்னார்.

'தேசிய இனப்பிரச்சினை' இருப்பதாக ஏற்க ஜனாதிபதி தன் உரையில் தெளிவாக மறுக்கிறார். இந்நாட்டில் நிலவும் பிரச்சினைகளை 'பொருளாதார' பிரச்சினையாக மட்டுமே அவர் இருக்கமாக பார்க்கிறார்.மக்களுக்கு குடிநீர், நீர்பாசனம்,வீடுகள்,நெடுஞ்சாலைகள் ஆகிய வசதிகளை வழங்குவதே,நல்லிணக்கத்துக்கு அடிப்படை என்பதுவே தனது அரசாங்கத்தின் நல்லிணக்க கொள்கை என ஜனாதிபதி கூறி முடித்தார்.

மலையக தமிழர்கள், முஸ்லிம் ஆகிய இலங்கையின் சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கும் விசேட பிரச்சினைகள் பற்றிய தீர்வுகள் தொடர்பிலும் ஜனாதிபதி கோதாபய ராஜபக்சவின் அடுத்த மூன்றாண்டுக்கான கொள்கை உரையில் எதுவும் கூறப்படவில்லை. அதிகார பரவலாக்கல், 13ம் திருத்தம் ஆகிய விவகாரங்கள் பற்றி ஜனாதிபதி ஒரு வார்த்தையும் கூறாமல் இந்நாட்டு தமிழ் பேசும் மக்களை ஏமாற்றி உள்ளார் என நான் நினைக்கிறேன். வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தனது அரசினால் முன்னெடுக்கப்படுவதாக கூறப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு வடகிழக்கு பிரதேசங்களில் இருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட எம்பீக்கள் 'ஒத்துழைப்பு' வழங்க வேண்டும் என்பதுவே அவரது அதிகபட்ச கோரிக்கையாக இருந்தது.

அதேவேளை தான் நியமித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத குழுவினால் எழுதப்படும் புதிய அரசியலமைப்பிற்கான வரைபை தனது அமைச்சரவையில் சமர்பித்து, அதன் பின் பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்க முடிவு செய்துள்ளதாக ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச கூறினார். இந்த புதிய அரசியலமைப்பு வரைபில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது கானல் நீராகவே இருக்கும் என்பதை ஜனாதிபதியின் உரை கோடிட்டு காட்டுவதாகவே நான் நினைக்கிறன்.






காதலர் தின வாழ்த்துக்கள் | Happy valentine's Day Feb.14





# நெதர்லாந்து, றோர்மோண்ட் தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம் நடாத்திய பெருவிழா!



நெதர்லாந்து, றோர்மொண்ட் தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம் நடாத்தும் தமிழ்ப் பாடசாலையின் வாணி விழா 17.10.2021 அன்று நடைபெற்றது. விழாவுக்கு மாணவர்களும் பெற்றோர்களும் வருகை தந்து சிறப்பித்திருந்தனர். 2020, 2021 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அனைத்துலகப் பொதுத் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்குச் சான்றிதழ்களும், அதிதிறன் மிகுதிறனில் சித்தியடைந்தவர்களுக்கு ஞாபகார்த்தக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன. மாணவர்களால் செம்மொழிப் பாடலுக்கு நடனமும் வழங்கப்பட்டது. 2020/2021 கல்வியாண்டில் நடாத்தப்பட்ட அனைத்துலகப் பொதுத் தேர்வில் வளர்நிலை 12 ஐ பூர்த்தி செய்த மாணவன் செல்வன்.விதுரன் வன்னியசிங்கம் வெற்றிக் கிண்ணம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவரை மன்ற நிர்வாகத்தினரும், தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் வாழ்த்துகின்றார்கள்.



08 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஹர்த்தால்

ஆபத்துக்குப் பாவமில்லை எண்டு அவரைக் கேக்க தம்பி எனக்கும் சாப்பாடு வேண்டப்போறன், வாங்கித்தாறன் எண்டு சொல்லி காலத்தால் அவர் செய்த உதவிக்கு நன்றியாக அடுத்தமுறை அவர் வீட்டுக் கோழியையே பிடிச்சு சமைச்சனாங்கள். ஹர்த்தால் இன்னும் தொடரக் காலமைச் சாப்பாடு முடிஞ்ச உடனயே set ஆகி cards, carom எண்டு தொடங்கினம். நெல்லிக்காய்,மாங்காய்,புளியங்காய் எண்டு எல்லா மரத்துக் காயும் வயித்தை நிரப்பிச்சுது.

உழைக்கும் வர்க்கத்து உறுப்பினர்களின் உபசரிப்பால் சில நேரம் ரொட்டியும் கறியும் வாங்கி பிச்சுக்கொத்தி[ கொத்து ] சாப்பிட்டம். ஆர்வத்தில கனக்க தேங்காயைப் புடுங்கீட்டு விக்கப் பாக்க, sorry கள்ளத் தேங்காய் வாங்க மாட்டம் எண்டு அக்கம் பக்கம் சனம் சொல்லிச்சுது. கொம்பனிக்கு நட்டம் வராம இருக்க,



பால் புளிஞ்சு தொதல் கிண்ட, வந்தது கழியா தொதலா எண்டு ஆராயாமல் சட்டியோட சாப்பிட்டம்.

ரெண்டு நாள் ஹர்த்தால் முடியாமல், தொடர்ந்து பள்ளிக்கூடத்தைப் பூட்ட,தென்னை எல்லாம் மொட்டையாக, கோழி எல்லாம் கூட்டுக்க பாதுகாக்கப்பட சாப்பட்டுக்கு வீட்டை நம்பி இருக்க வேண்டிய நிலை வந்தது.

ரெண்டு நாளில வாறகிழமை பள்ளிக்கூடம் திறக்குதாம் எண்டு பேப்பர் தலைப்புப் போட, எங்கடை நிஜ உலகத்தில இருந்து கனவுலகத்திக்கு [ பெற்றோரின் கனவு] போக ரெடியானோம்.

23 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நரை வரும் பருவம்

எவ்வளவு தான் மயிர் நரைத்தாலும் கடைசி வரை hair dye அடிப்பதில்லை, என்று ஏதோ வேகத்தில், ஏதோ அவசரத்தில், சமஷ்டி கேட்ட தமிழரசுக் கட்சியைப் போல, சபதம் வேறு எடுத்து விட்டேன். கன்னத்தில் கறுப்பு மை வழிய வழிய, எனக்கு நானே தலைக்கு கறுப்படிக்கும் காட்சியை முகக் கண்ணாடியில் காண, உண்மையிலேயே பயமாக இருக்கிறது.

எண்பதுகளில் நீட்டு காற்சட்டை போட்ட இயக்க அண்ணமார், எங்களது அரசியல் எதிர்காலத்தை, வேட்டி கட்டிய அரசியல்வாதிகளிடமிருந்து, பிடுங்கி



எடுத்த காலத்தில், வயதானவர்கள் எல்லோரையும் ஏளனமாக பார்த்த இழிவான காலங்கள் இன்றும் நினைவில் நிழலாடுகின்றன. ஊரில் ஓடித்திரிந்த Honda Chaly மோட்டார் சைக்கிள்களின் C50,C70 மொடல்களை வைத்து, ரோட்டில் போகும் வயதானவர்களை பார்த்து C50 என்றும், C70 என்றும் கத்தி விட்டு ஓடிய தலைமுறையல்லவா நாங்கள்?

வயதில் முதிர்ந்த, அரசியல் அனுபவத்தில் நிறைந்த, வயதான அந்த பரம்பரையை ஒதுக்கி விட்டும், அழித்து விட்டும், நாங்கள் பயணித்த பயணத்திற்கு நடந்த கதை வரலாறாகி விட்டது. இன்றைய இளம் தலைமுறை அன்றைய இளம் தலைமுறையை போல இல்லை என்று, அன்று களமாடிய இன்றைய வயதானவர்களின் கவலைக் குரல்களும் சத்தமாகவே கேட்கின்றது.

இன்று காலை எழுந்து, பல்லு மினுக்கி, shave எடுத்து விட்டு, மூக்கு கண்ணாடியை மாட்டிக் கொண்டு முகக் கண்ணாடியை பார்த்தால், அதே இடது கண் இமையில், நெட்டையாய் முளைத்திருந்த அந்த ஒற்றை நரை மயிருக்குப் பக்கத்தில், கட்டையாய் இன்னுமொரு கெட்ட நரை மயிர் ஒன்று குட்டியாய் முளைத்திருக்கிறது. கண்ணிமையில் முளைத்த ஒற்றை மயிரோடு மல்லுக் கட்டிக் களைத்தவனுக்கு, இரட்டையரை ஆண்டவன் பரிசாக அளித்திருக்கிறான். மறுபடியும் மீசையும் குறுந்தாடியும் வளர்க்கத் தொடங்கினால், மீசையும் நரைக்கிறது, தாடியும் நரைக்கிறது, ஆனால் ஆசை மட்டும் இன்னும் நரைக்கவேயில்லை .






# பிரிட்டனுக்கே அபகீர்த்தியை ஏற்படுத்தும் இலங்கை இராணுவ அதிகாரிகள் மீதான தடை கோரிக்கை!

இலங்கையின் இராணுவ தளபதிகள் இலங்கை வருவதற்கு தடை விதிப்பதில் பிரிட்டன் தயக்கம் காட்டுவதாக பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர் எலியட் கொல்பெர் கவலை வெளியிட்டுள்ளார். அத்துடன், அமெரிக்கா உட்பட உலக நாடுகள் பலவும் இலங்கை இராணுவத்தில் தளபதிகள் தரத்தில் இருப்போருக்கு அந்த நாடுகளுக்குள் நுழைய தடை விதித்துள்ள தருணத்தில் பிரிட்டன் மட்டுமே இலங்கை இராணுவத் தளபதிகள் பிரிட்டனுக்குள் நுழைவது சம்பந்தமாக எவ்வித தடையையும் கொண்டு வராதுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் இன்றைய முப்படைகளும் இலங்கையில் பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டவையாகும். ஆயுதப் படைகளுக்கு ஆட்சேர்ப்பது மட்டுமல்ல. முப்படைகளுக்குமான முகாம்கள்,விமான மற்றும் கடற்படை தளங்கள் என்பவைகூட பிட்டிஷாரின் ஆட்சிக்காலத்திலேயே இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்தன. திருகோண மலையின் சீனன்குடாவில் இயற்கையாகவே அமைந்துள்ள துறைமுகம் மற்றும் அதனோடு இணைந்த விமானப் படைத் தளம் உட்பட இராணுவ தளங்கள் அனைத்தினதும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் பிரட்டிஷார் காலத்திலேயே இலங்கையில் உருவாக்கப்பட்டன.

இலங்கை இராணுவத்தில் தளபதிகளாக ஆரம்பத்தில் பணியாற்றியவர்கள் ஆங்கிலேயர்கள். இவர்களைத் தொடர்ந்து இலங்கை இராணுவத்தின் முதலாவது இலங்கையரான தளபதியாக பதவி வகித்தவர் மேஜர் ஜெனரல் அன்ரன் முத்துகுமார் என்ற தமிழரே என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர, இலங்கை கடற்படையின் முதலாவது இலங்கையரான தளபதி கூட அட்மிரல் ராஜன் கதிர்காமர் என்ற, மறைந்த இலங்கை



வெளிவிவகார அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமரின் மூத்த சகோதரரே என்பதும் குறிப்பிடத்தக்கது. இதுதவிர இலங்கை விமானப்படையிலும் ஆரம்ப காலத்தில் நிறையவே தமிழர்கள் விமானிகளாகவும் உயர் அதிகாரிகளாகவும் பணியாற்றியிருந்தனர். ஆயினும், இலங்கை சுதந்நதிரமடைந்த பின்னர் ஆயுதப்படை களுக்கு உள்ளும் இனவாதம் உருவாகி தமிழர்கள் புறந்தள்ளப்படுகின்ற சூழ்நிலை களே மேலோங்கியிருந்தன. இத்தகைய இனவாத போக்கே நாளடைவில் ஆயுதப்படைகளையும் 99 சதவீதம் பெரும்பான்மை சிங்கள இனத்தவர்களை கொண்டதாக மாற்றமடைய வைத்திருந்தது. இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கையின் ஆயுதப்படையினர்மீது கடுமையான குற்றச்சாட்டுகள் ஆதாரங்களுடன் முன்வைக் கப்பட்டுள்ளன. அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு தடை விதிக்கப்பட் டுள்ள அதேசமயம் கடற்படையைச்சேர்ந்த சந்தன ரத்நாயக்க என்பவர் திருகோண மலையில் பதினொரு மாணவர்களின் மரணங்கள் தொடர்பாக அமெரிக்காவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டிருந்தது. அத்துடன், சுனில் ரத்நாயக்க என்ற இராணுவ சிப்பாய் ஒருவர் மட்டுவில் பகுதியில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டமை தொடர்பாக அமெரிக்காவுக்குள் நுழைய தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இவற்றைப் பின்பற்றியே பிரிட்டனுக்குள் ளும் இலங்கை ஆயுதப் படைத் தளபதிகள் நழைவதற்கு தடை விதிக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் எலியட் கொல்பர் கோரிக்கை விடுத்துள்ளார். பிரிட்டன் இலங்கை ஆயுதப்படையினருக்கு பயிற்சியளிப்பதில் நீண்ட கால தொடர்பை கொண்டுள்ளது. இந்தப் பயிற்சியை வழங்குவதில் பிரிட்டனின் உலகப் பிரசித்திபெற்ற இராணுவக் கல்லூரியான றோயல் மிலிட்டரி சான்ட்ஹேஸ்ட் கல்லூரி முக்கியமானதாகும். (Royal Military Academy Sandhust). இக்கல்லூரியிலிருந்தே நீண்டகால மாக இலங்கையின் பல இராணுவ அதிகாரி கள் தமது சேவைக்காலப்பகுதியில் இராணுவ பயிற்சிகளை பெற்றவர்களாக இருக்கின்றனர். இத்தகைய பின்னணியில் இலங்கை இராணுவ அதிகாரிகள் பிரிட்டன் வர தடை விதிக்கப் பட வேண்டுமென கோரப்பட்டி ருப்பது மறுபுறத்தே பிரித்தானிய இராணுவத் துறைக்கே கன்னத்தில் அறைந்தது போன்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளதோ என்றே எண்ணத்தோன்றுகின்றது. ஏனெனில், பிரிட்டனில் சிறப்பு பயிற்சி பெற்ற இலங்கை அதிகாரிகள் பலரும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக குற்றச்சாட்டப்பட்டுள்ளனர். இந்த அதிகாரிகளை பிரட்டன் வர பிரிட்டிஷ் அரசு அனுமதி மறுப்பதன் மூலம் ‘தாம் வழங்கிய பயிற்சிக்கு அபகீர்த்தியை’ தாமே ஏற்படுத்திக்கொள்வதா என்ற உணர்வை பிரிட்டிஷ் பாதுகாப்புத்துறை கொண்டுள்ளதோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது. எது எப்படியிருந்தபோதிலும் அமெரிக்காவோ அல்லது பிரிட்டனோ வடக்கு – கிழக்கு யுத்தம் இடம்பெற்றபோது ‘தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விட்டது’ போன்றே நடந்து கொண்டன. ஒருபுறம் வடக்கு – கிழக்கு தமிழர்களுக்கு அரசியல் தீர்வு பற்றி குறிப்பிட்ட அதே சமயம் மறுபுறத்தே விரிவான ஆயுதப்பயிற்சி, ஆயுத விற்பனை என்பவற்றில் அமெரிக்கா,பிரிட்டன் ஆகியவை நியாயத்தோடு எவ்வளவு தூரம் உறுதியான முடிவுகளை எடுக்கும் என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

நன்றி: ராஜதந்திரி, ஈழநாடு




காதலர் தின வாழ்த்துக்கள் | Happy valentine's Day Feb.14

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## அட கூடிவாழ்ந்தால் கோடி...

டுபாயிலிருந்தபடியே மோப்பம் பிடித்து, ஒட்டுக்கேட்டு படம்பிடித்து வந்தார் என்றும் நீதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது. இளவரசி ஹயாவின்தொலைபேசி மட்டுமல்ல, அவரது மெய்ப்பாதுகாவலர்கள்,அவரது சட்ட ஆலொசகர்கள், அவரது தலைமை பெண் வழக்கறிஞர், ஆளும் கன்சவேட்டிவ் கட்சியின் பிரபுக்கள் சபை சீமாட்டி ஷக்கிள்டன் ஆகியோரினதும் தொலைபேசிகளும் டுபாயிலிருந்து சட்டவிரோதமாக ஒட்டுக்கேட்கப்பட்டன என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு விட்டதாக பிரிட்டிஷ் நீதிமன்றம் கருத்து வெளியிட்டது. ஆறாவது மனைவியாக இருந்தாலும் டுபாய் ஆட்சியாளருக்கு இளவரசி ஹயா எப்போதுமே செல்ல மனைவியாகத்தான் இருந்தார். அதிகாரபூர்வ வைபவங்களுக்கு ஷேக் எப்போதுமே அழைத்துச் செல்வதுமூக்கும் முழியுமாக இருந்தஆறாவது மனைவி–செல்ல மனைவியைத்தான். இலண்டனிலும், மற்ற நாடுகளிலும் ஷேக்கின் குதிரைகள் பந்தயத்தில் ஓடும் போதும் ஷேக் இந்த செல்ல மனைவியைத்தான் அழைத்துச் செல்வது வழக்கம். ஹயாவின் கவர்ச்சியான–எடுப்பான தோற்றம்அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். ஷேக்கின் முன்னைய ஐந்து மனைவிகளில் ஒருவருக்கு பிறந்த ஷேக்கா சம்சா, ஷேக்கா லத்தீபா இருவரும் அரண்மனை கெடுபிடிகளிலிருந்து தப்பி ஓடும்போது ஷேக்கின் அதிரடிப்படையினரின் உதவியுடன் அவர்கள் மீட்கப்பட்டு மீண்டும் டுபாய்க்கே கொண்டுவரப்பட்டார்கள். ஷேக்கா லத்தீபாடுபாயிலிருந்து வள்ளம் ஒன்றில் புறப்பட்டு இந்தியாவின் கோவா துறையை அண்மிக்கும்போது ஷேக் இந்திய ராணுவத்தின் உதவியைக்கோரினார். இந்திய கடற்பரப்பில் இந்திய அதிரடிப்படைகள் வள்ளத்தை இடைமறித்து தாக்கினர். டுபாய் அதிரடிப்படையினர் ஷேக் லத்தீபாவுக்கு மயக்க ஊசி செலுத்தி தமது டுபாய் கப்பலுக்குபலவந்தமாகதூக்கிச் சென்றார்கள். இந்தியாவிலிருந்து அமெ



ரிக் காவுக்கு தப்பி ஓடி, அமெரிக்காவில் அரசியல்தஞ்சம் கோருவது லத்தீபாவின் திட்டம். இது 2018,ல் நடந்தது. தப்பி ஓட முயன்ற லத்தீபாவை ஒதுக்குப்புறமாக ஒருபண்ணைவீட்டில் கடும் பாதுகாப்பில் தடுத்து வைத்திருந்த போது சிற்றன்னை ஹயா அங்கு சென்று லத்தீபாவை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. லத்தீபாவை தடுப்புக்காவல் கைதியாகக் கண்ட சிற்றன்னை ஹயா தமக்கும் ஒரு நாள் இந்தக் கதிஏற்படலாம் என்று உணர அதிகநேரம் பிடிக்கவில்லை. லத்திபா மீது ஹயா அக்கறை காட்டுவது டுபாய் சர்வாதிகாரிக்கு சிறிதும் பிடிக்கவில்லை.

2019 ஏப்ரல் மாதம் மன்னரின் மனைவி ஹயா உறுதியான முயற்சி எடுத்தார். தனது நிலைமை டுபாயில் பாதுகாப்பானது அல்ல என்று தீர்மானித்து, ஏப்ரல் 19ஆம் திகதியன்று ஹயா டுபாயிலிருந்து விமானம் மூலம் வெளியேறினார். தனக்குப் பிறந்த இரண்டு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு, லண்டன்வந்திறங்கிய ஹயா தமது வழக்கறிஞர்களைச் சந்தித்தார். இதற்கிடையே தமது மனைவி ஹயா தமது பிள்ளைகள் இருவரையும் டுபாய்க்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்று இலண்டன் நீதிமன்றத்தில் டுபாய் ஆட்சியாளர் ஷேக்முகம்மது பின் மக்தூம்மனுத்தாக்கல் செய்தார். இந்த வழக்குத் தாக்கல் இலண்டன் நீதிமன்றத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் நடைபெற்றது. வரலாற்று முக்கியத்துவமிக்க தீர்ப்பு டுபாய் மன்னருக்கு எதிராக வழங்கப்பட்டது.

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## விடிஞ்சா பொழுதுபட்டா சீரியல்

சுவாரஸ்யம் ஆண்களைக் காட்டிலும் அதிகமாக பெண்களுக்கே அதிகம் பிடிக்கிறது. பிறர் வாழ்வில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதில் இயல்பாகவே பெண்கள் ஆற்படுகின்றனர். இதனால்தான் சீரியல்களில் வரும் கதாப்பாதிரங்களை யதார்த்தநிலை கடந்து நிஜமாகவே ஒருகட்டத்தில் நம்ப ஆரம்பித்துவிடுகின்றனர், இதனால் தான் அவர்கள் அழும்போது தாங்களும் சேர்ந்து அழுகிறார்கள் ... அவர்கள் இன்னல்களைச் சந்திக்கையில் தாங்களும் அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர். இதில் சிலர் அதில் வரும் சம்பவங்களை தங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த / நிகழ்ந்துகொண்டிருக்கின்ற சம்பவங்களை பொருத்திப் பார்த்து துன்பப்படுவதும் உண்டு இல்லையா ? காலையில் தொடங்கும் அழுது வடியும் சீரியல்களை அழுது வடிந்துகொண்டே சமையல் முதலான வீட்டு வேலைகளை செய்ய ஆரம்பித்து, இரவு உறங்கச் செல்லும்போதுகூட பதினோரு மணிக்கு ஒளிபரப்பாகும் இறுதி சீரியலில் நடக்கும் கஷ்டங்களையெல்லாம் பார்த்துவிட்டு அழுதுகொண்டே உறங்கச் செல்லும் பெண்களைக்கூட நாங்கள் சந்தித்திருக்ககூடும்.கண்ணீர், சோகம்,அனுதாபம்,என் பெண்களை சுலபமாக உணர்ச்சி வசப்படவைக்கும் கதைகளையே ஒவ்வொரு அலைவரிசையும் தேர்ந்தெடுக்கிறது . எல்லா சீரியல்களிலும், சினிமாவில் வரும் ஆண்களைவிட அதீத வில்லத்தனத்துடன் பெண்களின் கதாபாத்திரங்கள் படைக்கப்படுகின்றன என்பதை நாமறிவோம்,ஆள் கடத்தல், அடியாள் வைத்து கொலை செய்தல், அடுத்த பெண்களின் கர்ப்பத்தைக் கலைத்தல், குடும்பங்களை சதி செய்து பிரித்தல், மற்ற பெண்ணின் கணவனை அடைய முயற்சி செய்தல்,என்று இந்த சீரியல் வில்லிகள் செய்யும் குற்றங்களின் பாவப்பட்டியல் நீண்டுகொண்டே போகக்கூடியது. பெண்



கள் என்றாலே எப்போதும் சோகமாக, பிரச்சினைகளை சுமந்து திரிபவர்களாக,அழுது வடிபவர்களாகத்தான் இருப்பார்கள் என்பது இந்த சீரியல்களில் எழுதப்படாத விதி போலும்!

சில சீரியல்களை கடக்கவேண்டி ஏற்படுகையில்,‘ஐயோ...இதை எந்த ஆணாவது பார்த்தால், பெண்கள் எல்லோருமே இப்படித்தான் சகுனி வேலை பார்ப்பவர்களாக இருப்பார்கள்’ என்று எத்தனை ஆண்களின் மனதில் எதிர்மறையான எண்ணம்தனை உருவாகக் கூடும் என்று நினைத்து நொந்ததுண்டு. சமூகத்தில் நடப்பதைத்தானே காட்டுகிறோம் என்ற சீரியல் இயக்குனர்களின் சப்பைக்கட்டு ஏற்றுக்கொள்ளகூடியதாய் இருக்கிறதா? இன்னொரு பெண்ணின் கணவனை அடைவதற்க்காக சதி செய்வதையே முழுநேரத் தொழிலாகக் கொண்ட பெண்களின் வெறித்தனம், ‘அவனை என் காலில் விழுந்து கதற வைக்கிறேன் பார்’ என்றும்,‘ அவ எப்படி வாழ்ந்துடறான்னு பார்க்கிறேன்’ என்றும் சொடக்குப்போட்டு பேசும் கதாபாத்திரங்களும் வெறுமனே ஒரு பொழுது போக்கு நிகழ்ச்சிக்கான பாத்திரங்களாகப் பார்க்கப்படுவதில்லை. மாறாக,உண்மையான வாழ்வியல் உறவுப் பாத்திரங்களிடையே பிரதிபலிக்க ஆரம்பித்து விடுகிறது என்பதுதான் கசப்பான உண்மை. அது பெண்களில் ஒருவிதமான உளவியல் தாக்கத்தினை ஏற்ப்படுத்துவது உறுதி. அநேகமான நெடுந் தொடர்கள் குடும்பப் பிரச்சினைகளை மையமாகக்கொண்டே எடுக்கப்படுகிறது. ஆண்டுக்கணக்கில் தொடரும் இந்த தொடர்களின் மகத்தான வெற்றிக்கு காரணமும் இதுவே.

தன்னுடைய குழந்தைகளுக்கோ,கணவனுக்கோ சீரியல் முடிந்ததும்தான் சாப்பாடு என்று சொல்லும் பெண்களைக் கண்டிருக்கிறேன். இதைவிடக் கொடுமை என்னவென்றால் நிலாவைக் காட்டி குழந்தைகளுக்கு சோறூட்டிய காலம்போய்,சீரியல்களைக் காட்டி, அதில் வரும் கதாபாத்திரங்களின் பெயரைச் சொல்லி உணவூட்டும் தாய்மார்களை கண்ணுறுவதுதான்! விபரம் புரியாமலேயே அம்மாவோடு அமர்ந்து சீரியல் பார்க்க ஆரம்பிக்கும் குழந்தைகள் வாய் பேசத் துவங்கும்போதே சீரியல்களில் வரும் டைட்டில் சாங்ஸைக் கேட்டதும், அந்தத் தொடரின் பெயரை சொல்ல ஆரம்பித்துவிடும், போதாக்குறைக்கு அந்தப் பாடலை பாடியும் காட்டும். இதைப் பார்க்கும் அன்னைக்கோ ஆனந்தம் ... என் பிள்ளை எவ்வளவு புத்திசாலி என்று,அதன் பின்விளைவு புரியாமலேயே பெருமிதப்பட்டுக் கொள்வதுதான் வேதனை. இந்தக் குழந்தைகள் ஆயிரம் கொலைகள், பாலியல் வல்லுறவுகள், ஆள் கடத்தல், குண்டு வெடிப்புகள், சாதிச் சண்டை, மதச் சண்டை, கள்ள உறவுகள், மாமியார் மருமகள் பிரச்சினைகள்,என்று உலகின் சகல தீமைகளையும் கண்டுகொள்கின்றனர். மேலும், குழந்தை தான் செய்யும் தவறுகளுக்கு தான் கண்ணுறும் சீரியல் பெரியவர்களையே முன்னுதாரணமாகக் கொண்டுவிடகூடிய அபாயமும் உண்டு இல்லையா? மணிக்கணக்காக சீரியல் பார்க்கும்போது நம்முடைய மூளை சிந்திக்கும் திறனை இழந்து மழுங்கடிக்கப்பட்டுவிடும், எதிர் மறையான எண்ணங்களும்,வீண் கற்பனைகளும்தான் நமக்கு மிஞ்சகூடும். மணிக்கணக்கில் உட்கார்ந்திருந்து உடல் எடையினை அதிகரித்துகொள்வதுடன், பார்வைக்கோளாறு போன்ற நோய்களையும் வாங்கிக்கொள்ளத்தான் வேண்டுமா?









# இது காதல் கதை அல்ல!

கே.எஸ்.சுதாகர்
(அவுஸ்ரேலியா)

சனிக்கிழமை மதியம். சாப்பாட்டு மேசையில் அப்பாவும் அம்மாவும், தமது மகனுடன் சேர்ந்து உணவருந்துவதற்காக, அவனது வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். வெளியே கார் வந்து நிற்கும் சத்தம் கேட்கின்றது. நண்பர்களுடன் சுற்றிவிட்டு வந்திருந்தான் மகன். கொஞ்சம் பதட்டமாகவும் இருந்தான்.

‘‘அப்பா இப்ப உங்களுக்கு வயது அறுபதைத் தாண்டிவிட்டுது. நீங்கள் உங்கட முதுமைக்காலத்தில உடம்புக்கு முடியாத வேளையில எங்கை இருக்க விரும்புறியள்?’’

சாப்பாட்டு மேசையில் வட்டமாகச் சுற்றியிருந்து உணவருந்திக் கொண்டிருந்த வேளையில், திடீரென்று அப்பாவைப் பார்த்து மகன் பீடிகை போட்டான். அப்பா நிமிர்ந்து மகனைப் பார்த்தார். பின் மனைவியைப் பார்த்தார். மனைவி தன்னை விட வயதில் குறைந்தவள் என்பதால், மகன் இந்தக் கேள்வியை முதலில் தன்னிடம் கேட்டிருக்கலாம் என நினைத்தார்.

‘‘நீ என்ன நினைக்கிறாய் மகனே! ’’ என்று கேள்வியைத் திருப்பி மகனிடம் உருட்டி விட்டார் அப்பா.

அப்பா உங்களை நீங்களே பாத்துக்கொள்ள முடியாத சந்தர்ப்பம் வரேக்கை, நீங்கள் என்ன சொல்லுவியள் எண்டு எனக்குத் தெரியாது. அப்ப நீங்கள் சொல்லுறதையும் என்னாலை ஏற்றுக்கொள்ள முடியாது. இப்ப நீங்கள் சுய நினைவோடை இருக்கேக்கை சொல்லுற பதில் தான் சரியா இருக்கும். நீங்கள் இந்த வீட்டிலேயே என்னோடை இருக்க விரும்புகிறியளா அல்லது முதியோர் காப்பகத்தில் இருக்க விரும்புகின்றீர்களா?

‘‘ஏன் இப்ப இந்தக் கேள்வி?’’ பேசாமல் சாப்பிடு என்றார் அம்மா.

‘‘அம்மா நான் கேட்கிறது அப்பாவுக்கு எண்டல்ல. உங்களுக்கும் தான். எனக்கெண்டா நீங்கள் என்னோடை இருக்கிறதுதான் விருப்பம். ஆனா என்னாலை உங்களை முழுமையா பராமரிக்க முடியும் எண்ட நம்பிக்கை இல்லை. அதுக்குக் காரணம் வேலை. வேலை வேலை எண்டு அலைஞ்சு போட்டு, உங்கட மனம் கோணாமல் முழுமையாப் பாக்கலாம் எண்டு நான் நினைக்கேல்லை. முதியோர் காப்பகம் பரவாயில்லை எண்டு நினைக்கிறன்.’’

‘‘நீயே கேள்வியையும் கேட்டு பதிலையும் சொல்லு’’ என்றார் அம்மா.

‘‘அப்பிடியில்லை உங்கடை பதில் என்னவெண்டு அறிய விரும்புறன்.’’

‘‘மகனே! இயலுமானவரை நானும் அம்மாவும் ஒண்டா இருக்க விரும்புறம். மற்றது முதியோர் காப்பகம் எண்டா எனக்கு பக்கத்திலை நாலு தமிழர்கள் எண்டாலும் இருக்க வேணும். முகட்டை முகட்டைப் பாத்துக்கொண்டு, மூக்குச் சொறிஞ்சுகொண்டு இருக்கேலாது. தமிழ் படங்கள் சீரியல்கள் போட்டுக் காட்டிற இடம் வேண்டாம். எதுக்கும் முதலிலை நீ ஒரு கலியாணத்தைச் செய். அதுக்குப் பிறகு நான் என்ரை முடிவைச் சொல்லுறன்.’’

அம்மா கையைத் தட்டிக் கெக்கட்டம் விட்டுச் சிரித்தார். மருமகளைப் பொறுத்துத்தான் தன் பதில் அமையும் என்பதைக் கணவர் பூடகமாகச் சொல்லுகின்றார் என நினைத்தார் அவர். மகன் முப்பது வயது கடந்தும் திருமணம் செய்கின்றான் இல்லை. பேசிச் செய்யும் கலியாணத்திலையும் அவனுக்கு விருப்பம் இல்லை. தானாகப் பார்க்கின்றானும் இல்லை என்பது அம்மா அப்பாவின் கவலை.

‘‘இருங்கோ ஒரு நிமிஷத்திலை வந்திடுவன்.’’ இருக்கையை விட்டு எழுந்தான் மகன்.

‘‘இப்ப எங்கை போறாய்? சாப்பாட்டை முடிச்சுக் கையைக் கழுவிப் போட்டுப் போ.’’

‘‘வெளியிலை காருக்குள்ளை ஒரு ஆள் இருக்கு. உங்களுக்கு அறிமுகப்படுத்த வேணும்.’’

அம்மாவும் அப்பாவும் திகைத்துப் போனார்கள்.

‘‘காருக்குள்ளை வைச்சுப் பத்திரமாப் பூட்டிப்போட்டு வந்திருக்கிறான்’’ என்றார் அப்பா. கதவைத் திறந்து மகன் போகும் திசை நோக்கி இருவரும் பார்த்தார்கள். காருக்குள் இருந்து ஒரு வெள்ளை இனத்துப் பெண் குதித்து இறங்கினாள். குதியுயர்ந்த செருப்பு, குல்லாவுக்குள்ளால் கூந்தல் இறங்கி கழுத்துவரை படந்திருந்தது. கூலிங் கிளாஸ் போட்டிருந்தாள். இறங்கியதும் மகனைக் கட்டிப்பிடித்துக் கொஞ்சினாள்.

‘‘நான் முதியோர் காப்பகத்தைத் தான் விரும்புறன்’’ வாயிற்குள் முணுமுணுத்தார் அப்பா.

‘‘ஹாய் ஐ ஆம் ஜூலி’’ என்றபடியே அந்தப்பெண் கையை நீட்டினாள்.

‘‘கொரோனா பிள்ளை கொஞ்சம் தள்ளி நில்’’ என்று சொல்வதற்கு வாயெடுத்த அம்மா, பின், தன் மகனுடனே கூட வந்திருக்கின்றாள், கொரோனாவாவது மண்ணாங்கட்டியாவது என நினைத்துக்கொண்டு கையை நீட்டினார். அவளின் கை அவருக்குக் குளிர்ச்சியாகத் தெரிந்தது.

‘‘வா பிள்ளை வீட்டுக்குள்ளை இருந்து கதைப்பம்’’ ஆங்கிலத்தில் தடுமாறினார் அம்மா. அப்பா, ஜூலியை நோட்டம் விடுவதில் இருந்தார். மகனுக்குத் தோதாக உயர்ந்து மூக்கும் முழியுமாக அவள் இருந்ததைப் பார்த்து அரை மனது கொண்டார்.

சாப்பாட்டு மேசையில் இப்பொழுது நான்குபேர்கள் இருந்தார்கள். அம்மா அவளுக்கு சாப்பாடு போட்டு தட்டில் குடுத்திருந்தார். ஜூலி குனிந்த தலை நிமிராது அடக்க ஒடுக்கமாக இருந்தாள்.

‘எல்லா இனத்திலையும் நல்லவையும் இருக்கினம். கெட்டவையும் இருக்கினம்.’ எல்லாம் அவரவர் மனங்களைப் பொறுத்தது’ அம்மாவின் மனதில் தத்துவம் ஓடியது. இருந்தாலும் ஒரு‘தமிழ்ப்பிள்ளை’ வரவில்லையே எண்ட ஏக்கம் பிறந்தது.

‘‘எங்கையடா இவளைப் பிடிச்சாய்?’’ ‘‘அம்மாவின் கேள்விக்கு, அம்மா ஜூலிக்கு தமிழ் விளங்கும்’’ என்றான் மகன். ஒண்டா வேலை செய்யுறம் என்றாள் மருமகள்.

‘‘பிள்ளை சாப்பிடும்’’

ஜூலி கையினால் உணவைப் பிசைந்து ஒரு கவளம் வாயில் போட்டாள். பின்பு, நான் அப்பளம் பொரிப்பேன், பருப்பு சமைப்பேன், முருக்கங்காய் குழம்பு வைப்பேன், உங்களைக் கவனமாப் பாப்பேன் என்று கொஞ்சும் தமிழில் ஜூலி சொன்னாள்.

‘‘இவன் தமிழ் எல்லாம் படிப்பிச்சுத்தான் கூட்டி வந்திருக்கிறான் போல’’ என்று சிரித்தபடியே அப்பா சொன்னார்.

‘‘இவ தமில் நல்லா படிப்பிச்சு’’ ஜூலி ஒவ்வொரு சொல்லாச் சொல்ல, எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். அம்மாவுக்கு அவளை ஒரு பக்கத்தில் இருந்து பார்க்க தமிழ் பெட்டைபோல் தெரிந்தது. ‘முருக்கங்காய் குழம்பு வைப்பேன், உங்களைக் கவனமாப் பாப்பேன் என்ற வார்த்தைகளின் சாயலாகவும் அது அமைந்து இருக்கலாம்.



Deutsche Bank

# Willkommen in Ihrer Filiale Duisburg.



Janagran Mahendran
Berater Private Banking

Als Kunde erwarten Sie heute nicht nur erstklassige Finanzlösungen, sondern eine faire und verständliche Beratung. Wir wollen Ihren Ansprüchen gerecht werden – und haben uns zum Ziel gesetzt, Sie als verlässlicher und leistungsstarker Partner auf Ihrem privaten und geschäftlichen Weg zu begleiten. Dafür verbinden wir die Reichweite, Erfahrung und Leistungsstärke eines global führenden Finanzdienstleisters mit der Zuverlässigkeit und Kundennähe einer Hausbank. Sprechen Sie jetzt mit uns.

Filiale Duisburg
Königstraße 7–11, 47051 Duisburg
Telefon (0203) 9922-521
janagran.mahendran@db.com

| | |
|---|---|
| Nettodarlehensbetrag | 1.000 EUR |
| Effektiver Jahreszins* | 1,75 % |
| Fester Sollzinssatz p. a. | 1,74 % |
| Monatliche Rate | 84,12 EUR |
| Laufzeit in Monaten/Anzahl Raten | 12 |
| Zu zahlender Gesamtbetrag | 1.009,43 EUR |

Das Angebot entspricht dem repräsentativen Beispiel gemäß § 6a Absatz 4 PAngV.




*Gilt für einen Kreditbetrag von 1.000 bis 50.000 Euro bei 12 Monatsraten (gilt nur für Kunden ohne bestehenden Deutsche Bank PrivatKredit). Diese Kondition erhalten mindestens 2/3 der Kunden bei Abschluss eines Deutsche Bank PrivatKredits. Laufzeit in Abhängigkeit vom Ratenzahlungsbeginn: 12 bis 16 Monate. Das Angebot ist gültig bis 31. März 2021. Bonität vorausgesetzt.

Darlehensgeber: Deutsche Bank AG, Theodor-Heuss-Allee 72, 60486 Frankfurt am Main



அல்லு அர்ஜுன் நடித்த புஷ்பா திரைப்படத்தில் இடம்பெற்ற 'ஓ சொல்றியா மாமா என்ற பாடலுக்கு நடனமாடிய சமந்தாவின் சம்பளம் எவ்வளவு என்பது குறித்த தகவல் தற்போது வெளிவந்துள்ளது. நடிகை சமந்தா தற்போது ஒரு திரைப்படத்தில் நடிப்பதற்கு மூன்று முதல் நான்கு கோடி சம்பளம் வாங்கி வருகிறார்.

# 7 மணி நேரத்தில் 5 கோடி சம்பாதித்த சமந்தா

இந்த நிலையில் புஷ்பா படத்தில் இடம்பெறும் ஐட்டம் பாடலுக்கு நடனமாட அழைப்பு வந்தது. அந்த பாடலுக்கு நடனமாட முதலில் சமந்தா தயங்கியதாகவும் ஆனால் அல்லு அர்ஜுன் நேரடியாக சமந்தாவிடம் பேச்சு வார்த்தை நடத்தி 5 கோடி சம்பளம் தருவதாக கூறியதை அடுத்து அவர் ஒப்புக் கொண்டதாகவும் கூறப்படுகிறதுஇதனை அடுத்து 'ஓ சொல்றியா மாமா பாடலுக்கு சமந்தா வாங்கிய சம்பளம் 5 கோடி என்று கூறப்படுகிறது.

இந்த பாடல் படத்தில் மூன்றே மூன்று நிமிடங்கள்தான் வரும் என்றும் இந்த பாடலை படமாக்க சுமார் 7 மணி நேரம் மட்டுமே ஆனதாகவும் கூறப்படுகிறது. ஏழு மணி நேரத்தில் 5 கோடி ரூபா சம்பாதித்து உள்ள சமந்தாவை பார்த்து தெலுங்கு திரையுலகமே ஆச்சரியத்தில் மூழ்கி உள்ளது.

# சார்பட்டாவுக்கு சர்வதேச அங்கீகாரம்

நடிகர் ஆர்யா, பசுபதி உள்ளிட்ட நட்சத்திரங்களின் நடிப்பில், பா.ரஞ்சித் இயக்கத்தில் நடிப்பில் வெளியான படம் சார்பட்டா பரம்பரை. இப்படம் பெரும் வெற்றி பெற்றுள்ளது. தற்போது படத்திற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இது குறித்து, நியூசிலாந்தைச் சேர்ந்த letterboxed என்ற இணையதளம் 2021 ஆம் ஆண்டு வெளியான உலகின் சிறந்த 10 ஆக்சன் படங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.அதில், பா.ரஞ்சித் இயக்கத்தில் வெளியான சர்பட்டா பரம்பரம் படம்3 வது இடத்தைப் பிடித்துள்ளது. எனவே இப்படக்குழுவுக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது.

# 'சூர்யாவின் வாடிவாசல்' ஓடிடி உரிமை 50 கோடி ரூபா

சூர்யாவின் சூரரைப் போற்று திரைப் படத்துக்குப் பிறகு அவர் வெற்றி மாறன் இயக்கத்தில் தாணு தயாரிப்பில் வாடிவாசல் படத்தில் நடிப்பார் என சொல்லப்பட்டது. அந்த படத்துக்கான போஸ்டர் கூட வெளியானது.

ஆனால் இப்போது சூர்யாவின் அடுத்த படத்தை இயக்குநர் பாண்டிராஜ் இயக்கவுள்ளார். அதற்கடுத்தும் சில படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி வருகிறார். அதே போல வெற்றிமாறனும் சூரி மற்றும் விஜய் சேதுபதி நடிப்பில் விடுதலை என்ற படத்தை இயக்கி வருகிறார்.இருவரும் தங்கள் படங்களை முடித்த பிறகு வாடிவாசல் இந்த ஆண்டு இறுதியில் தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சூர்யா பாலா மற்றும் சிறுத்தை சிவா ஆகியோரின் படங்களை இயக்கிய பின்னரே வாடிவாசல் படப்பிடிப்பில் கலந்து கொள்கிறாராம். ஆனாலும் அந்த படத்தின் வியாபார வேலைகளை தயாரிப்பாளர் தாணு தொடங்கிவிட்டார். இந்த படத்தின் ஓடிடி உரிமையை சோனி லிவ் சேனலுக்கு கொடுப்பதாக ஒப்பந்தம்



செய்துள்ளாராம். ஓடிடி உரிமைக்காக 50 கோடி ரூபா பேசப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

திரையரங்கில் வெளியாகி பின்னர் ஓடிடியில் வெளியாகும் படம் ஒன்றுக்கு இவ்வளவு தொகையா என்ற ஆச்சர்யமே எழுந்துள்ளது. அதற்குக் காரணம் சூர்யாவின் ஓடிடி படங்களான சூரரைப் போற்று மற்றும் ஜெய் பீம் ஆகியவை அடைந்த வெற்றியே என சொல்லப்படுகிறது.



# பொன்னியின் செல்வனில் எம்.ஜி.ஆர்

எழுத்தாளர் கல்கி 1950களில் எழுதிய பொன்னியின் செல்வன் நாவல் உலகின் கிளாசிக் நாவலாக பல ஆண்டுகளாக கோலோச்சி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் புத்தக சந்தையின் போதும் அதிகமாக விற்கும் புத்தகங்களின் பட்டியலில் பொன்னியின் செல்வன் நாவல் கண்டிப்பாக முன்னிலையில் இருக்கும்.

இந்த நாவலை எம்ஜிஆர் படமாக்க வேண்டும் என்று முயன்று, அதற்காக இயக்குநர் மகேந்திரனை திரைக்கதை எழுத வைத்தார். ஆனால் பல காரணங்களால் அது நடக்கவில்லை. பின்னர் தன் தயாரிப்பில் கமல் நடிப்பில் அதை உருவாக்க வேண்டும் என நினைத்தார்.

ஆனால் அதுவும் கைகூடவில்லை. அதன் பின்னர் இயக்குநர் மணிரத்னம் பல முயற்சிகளுக்குப் பிறகு இப்போது இரண்டு பாகங்களாக உருவாக்கி வருகிறார்.அவரை தவிர ரஜினியின் இளையமகள் பொன்னியின் செல்வனை வெப் தொடராக தயாரித்து வருகிறார்.

இந்நிலையில் இப்போது எம் ஜி ஆரை அனிமேஷன் கதாபாத்திரமாக மாற்றி பொன்னியின் செல்வனை திரைப்படமாகவும், வெப் சீரிஸாகவும் உருவாக்க இருக்கிறார்கள்.இளையராஜா இசையமைக்க இருக்கும் இப்படத்தை அஜய் பிரதீப் இயக்க இருக்கிறார்.



தோற்றம்: 10.06.1931
மறைவு: 12.01.2022

# வெற்றிமணியின் இதய அஞ்சலி!

## அமரர்.இராசையா.சுப்பிரமணியம்

யாழ். வேலணை வடக்கு சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும், வேலணை மேற்கு சிற்பனையை வசிப்பிடமாகவும், கனடா Brampton ஐ வதிவிடமாகவும் கொண்ட இராசையா சுப்பிரமணியம் அவர்கள் 12.01.2022 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சுந்தரம் மனோன்மணி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற ரேவதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான முத்துலிங்கம், கைலாயபிள்ளை, கனகம்மா மற்றும் சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இவர் ரகுநாதன் (ஜேர்மனி Asia Samuthiram Hückelhoven), குகநாதன் (குணம்– கனடா), உதயராணி (கௌரி– கனடா), வசந்தராணி (வசந்தா– கனடா), இந்திராணி (சாந்தி– கனடா), திருநாதன் (திரு– கனடா), விஜயராணி (விசயமலர்–கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,ஜலஜா (ஜேர்மனி), றஜனி (கனடா), ஆனந்தராஜா(கனடா), பாலசிறி (கனடா), குகனேஸ்வரன்(கனடா), சமீரா (ஆஷா– கனடா), குணசிங்கம் (ராசன்–கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

வெற்றிமணி அன்னாருக்கு இதய அஞ்சலி செய்கிறது.

தகவல்: இராசையா.ரகு (மகன். யேர்மனி– Asia Samuthiram Hückelhoven) Mobile : +4915209009030


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
திருமண பட்டுப்புடவைகள் புத்தம்
புதிய டிசைன்களில் மங்கையர் மனங்கவரும்
சேலைகள் சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
குர்த்தாக்கள், இன்னும் இமிற்றேசன் நகைகள் அனைத்தும்
ஒரே இடத்தில் பெற்று மகிழ நாடுங்கள்.
என்றும் சிறப்பு விலை
தொடர்பு இலக்கம்: 01731937325
Tel: 02102 844744
HP: 0173 1937 325
'Jasmine Silk House'
Fester Str.50- 40882 Ratingen


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
உரிமையாளர்: பா.கணேஷ்
Ria
VALUTRANS
MoneyGram
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Ludwig str.87a
70197
Stuttgart
சிறப்பு
விலையில்
அழகிய
சேலைகள்
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்றேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
SALE
Stuttgart நகரில்...
Tel: 0711 615 8976/ 0170 334 4059


TTBOX
HAPPY Valentines DAY
Feb 14
FURTHER MORE DETAILS CONTACT WITH US
0049 163 000 7800
0044 7523 2323 43
0045 2657 3651
0033 6057 5239 9
0031 6180 20014


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
புதிய
இடத்தில்!!!
புதிய
பொலிவுடன்!!
069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K France Germany Australia South Africa Canada U.S.A


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696 | Fax: 0231/8602698